KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ௵ மே ௴ 9௨ [No. 19.

OFFICE OF THE REG… 1929 MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 361
2. ஏமாங்கதத் திளவரசன் (A Novel) T. N. சேஷாசலம் B.A., B.L. 363
3. மாறன் பாப் பாவினம் (K. நாராயணசாமி செட்டிகாரு அனுப்பிய பிரதி) 365
4. அப்பர் E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 367
5. கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A, B. L. 369
6. வறுமைப்பிணி—P. இராமாநுஜன் 371
7. வில்லி பாரத விளக்கம் T. S. நடராஜ பிள்ளை B.A., B.L. 372
8. கும்பகர்ணன்—R. முத்தையர் 274
9. தமிழ்ப் பாடம் 376
10. வர்த்தமானம் 379

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்ப இயலாது.

மானேஜர்.

## கலா நிலயம்

### வள்ளுவர் வாய்மை.

### VI

சொல்லிச் சொல்லிப் பழையனவென்று கழிக்கப் பெறுவன பற்பலவாகக் கல்வியையுஞ் சொல்லாமல் கழித்தகற்றுவதைச் சென்றவாரம் சிறிது செப்பி, அவ்வா றகற்றியபின் குடிப்புகுஞ் செல்வம் இன்னதென்பதாமாறுங் காட்டினோம். விலக்குவதற்கும் வைப்பதற்கு முரியகுறள்களை ஆய்வார் உளரேனும், அந்நூலின்கண் அயிர்த்தற்கு இறையேனு மிடமின்றி அமைந்துள கொள்கைகளைக்கையாளவேண்டுமென்று நெஞ்சால் நினைத்துச் சொல்வார்தமைச் சந்தித்தல் அரிதாயிருக்கின்றது. உரைப்பவர் இரண்டொருவர் உளரெனின் அன்னார் மெய்யுரைகளை உய்யும் நெறியெனப் போற்றிப் பயில்வாரை எங்குங் காண்கிலேம். ஸ்ரீ. அரவிந்தகோஷ், கவி இரவீந்திரநாதர் அனைய மேன்மையோர் கலைத்திறம் உரைக்கின்றனர். ஆயின் என்! பொதுஜனங்களும் அச்சனங்களை நடத்துவோரும், தம் நாட்டின் பெருமையைப் பாராட்டிப் பிறரோடு இகல்கூற அம்மேன்மக்களது பேர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனரே யல்லாது, அவர் தம் பொருளுரைகளுக்கோ தம்மிரு செவிகளை ஒரு சிறிதுந் திறந்துவையார்.

எமது சந்தாரேயொருவர், "கலைகளின், தன்மையையும் பொதுஜனப் பயனையும் பற்றிக் கலாநிலயம் கொண்டுள கொள்கைகளையே அரவிந்தர் குறித்திருக்கக் காண்கின்றேன். இதனை நோக்குவீர்" என, ஏதோவொரு பத்திரிகையினின்று கிழித்த ஏடு ஒன்றை எமக்கு அனுப்பினர். 1922-வது வருடத்தில் ஸ்ரீ அரவிந்தர் எழுதியிருந்த கட்டுரைகளிற் சில வாக்கியங்கள் அதன்கண் பெயர்த்து அச்சிடப் பெற்றிருக்கின்றன. அவ்வாக்கியங்களின் மொழிபெயர்ப்புப் பின்வருமாறு:—

"அழகியவைகளின் பயனை அறவே குறைத்தும், அவசியமானவைகளின் பயனை அளவுகடந்து அதிகமாக்கியும், மதித்தலே தற்கால நோக்கமா யிருக்கின்றது.........காசுக்குக் கைநீட்டுமோ ருயிரற்ற கல்வி முறையால் இக்காலம் நாமெல்லாம், பாம்பரையியதியின் செம்மையும் கலையினுற் பண்பட்டநிலையு மாய பண்டைநாள் வேர்களினின்று வெட்டுண்டு கிடக்கும் இவ்விந்திய நாட்டில், சனங்களுக்கு இயல்பாயுள்ள மனோபாவமும் நல்லுணர்வும் ஆன்மநுணுக்கமும், அவ்வாறு மாறி மதித்தலால் விளைகின்ற கொடுமைகளைச் சற்றே தணித்து வைக்கின்றன. இக்குணங்கள் நம்மவர்பால் இப்போது இருக்குமிடந்தெரியாமல் அமிழ்ந்துகிடக்கின்றன என்பதுண்மையே. ஆயினும் அவை இன்னுங்கூட முற்றிலு மழிந்துவிட வில்லை. அழியவில்லையானாலும ஆழத்திலே அவை அமிழ்ந்து கிடப்பதால், கருவியையே காரியமென மயங்கி இம் மன்பதை யுலகத்தைப் பெரியதொரு எறும்புப் புற்

றேயாமாறு செய்து,வாழ்வின் பண்பும் பயனுமற வறியதாக்கி விடுவதிலேயே கண்ணுங்கருத்துமா யிருக்கின்ற இக்காலம், இசைக்கும் கலைக்கும் காவியங்களுக்கும் நம்முன்னோர் அத்துணை உயர்ந்தநிலை அளித்ததன் பொருளை எவ்வாறு அறிதல் கூடும்!

"கலைகளால் எய்துதற்குரிய நற்பயன்களின் முதற்படி, அழகினது உணர்ச்சியாகும். இவ்வுணர்ச்சியால் அடையும் இரண்டாவது படி புத்தியின் பயிற்சியும் அறிவும் ஆம். யாவற்றினும் மேலாய மூன்றும் படி ஆன்மானுபவம். அழகின் உணர்ச்சியை நாம் முதல் படியே யென்று கூறியதால் ஜனங்களுக்கு அதுசெய்கின்ற மிகப்பெரிய உதவியினை அறியாது தாழ்த்திப் பேசியதாக எண்ணவேண்டா; மற்ற இரண்டின் உயர்வையுங் கருதுங்கால் அதனை ஆரம்பப் படியாக அமைக்கலாயினேம். அழகினது உணர்வால் வரும் நலங்கள் அளவிறந்த மேன்மையன. மானுட வளர்ச்சி மேன்மேலும் உயர்வதற்கு,முதலிலே 'அழகு' தன் வேலையைச் செய்துவைக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

* * *

அழகென்பதும் நன்மை யென்பதும் ஒன்றே யென்று அறிவாளிகளிற் பலர் கொள்கின்றனர். இதுவும் உண்மைதான் என்பதல்லாமல்,வாழ்க்கைக்கு மூலமாய உண்மை இதுவொன்றே என்று கூறவேண்டும். நம்முடைய தத்துவ சாஸ்திரங்களின்படி, அண்டங்களெல்லாம் ஆனந்தத்தினின்று தோன்றி மீண்டுமவ் வானந்தத்தி னுள்ளேயே ஒடுங்குகின்றன. ஆனந்தமென்பது, இன்பம் அன்பு அழகு என்னும் மும்மொழிகளால் பகரப்பெறும். மக்களும் பிராணிகளுமடங்கிய இப்பிரகிருதிப் பொருள்கள் யாவற்றிலுந் திப்பிய அழகு தோன்றக் காண்பதும், கண்டதை அன்போடு ஆதரிப்பதும், அவ்வழகிலும் அன்பிலும் மாசிலாவொரு தூய இன்பத்தை அனுபவிப்பதும் ஆகிய இம்முறையே மாந்தரினம் கடவுளை அடைவதற்கென வகுத்துள நெறியாகும். அவித்தையின் மூலமாக வித்தையை அடைவதென்பது. இது. உபநிடதங்கள் இடைவிடாது உரைக்கின்ற பரமபுருடனை, அவனது எண்ணில் பல்வேறு தோற்றங்கள் மூலமாய் எய்துவதென்பதும் இன்னதே"

ஸ்ரீ. அரவிந்தரது சொற்களிவை யொவ்வொன்றுங் கோடி பெறும். இதனை ஒப்பெடுத்துக் காட்டிய நமது நண்பர்க்கு வந்தனம். இத்தகைய பெரியோரும் தன் சார்பு நிற்றலால் கலாநிலயம், எந்திரம்முதல் குண்டூசி வரையில் செய்யுந் திறத்தளவில் பேரறிவும் நுண்ணறிவும் அடங்காவென்றும், குறைந்தவிலைக்கு வாங்கியிருந்தவிலைக்கு விற்கின்ற சாமர்த்தியமும் சாதனங்களும் மாந்தர் முன்னேற்றமென்பதைச் சாதித்தனவாகாவென்றும் ஒருமுறைக்குப் பன்முறை ஓதிவைக்கத் துணிகின்றது. திருவள்ளுவரும் அரவிந்தரும் நிரந்தரமாய ஓரே வாய்மையை இருவேறு விதத்தில் வகுத்துக் காட்டினர்.செல்வம் பெருகுவதற்குரிய தொழிற்பயிற்சியும் வர்த்தகமுறைகளும், அத்தொழிலும் வர்த்தகமும் வளர்ந்து காக்கப்பெறுவதற்குத் தகுதியான அரசியல் அமைப்பும்,கருவிகள்தாம். கருவிகளைச் செய்து குவிப்பதே கருமமாகாது. கருமமின்னதென்று தேர்ந்த பின்னரே கருவிகள் வேண்டும். பெட்டியொன்று செய்வதற்கேனும் செய்யப் பயில்வதற்கேனும் உளியைக் கைக்கொள்வான் தச்சன். ஒன்றுஞ் செய்யநினையாமல், நினைத்தாலுந் தெரியாமல், தெரிந்தாலும் ஒவ்வாமல் இருப்பானொருவன் ஆயிரம் உளிகள் வைத்திருந்தாலும் தச்சனே வாகான். கோபம் வந்தபோது யாரையேனும் குத்துதற்கே அவன் கையிருந்த உளி உதவும். கலைகளிற் பயிலாதார், அழகினால் அன்பும் அன்பினால் இன்பமும், இம்மூன்றுமாய கடவுளையும் எய்துவதே வாழ்வின்காரியம் என்பதைப் பெரும்பாலும் உணரமாட்டார். கருவியைப் பெறுவதே காரியநிறைவென்று. மருண்டதன்மையராய இன்னார் கைப்பட்ட திரு இவர்க்குந் துன்பமாய்ப் பிறர்க்குந் துன்பமாய்த் திரிகின்றது.

இன்னவாறு மக்கள், உரையா லல்லாவிடினும் உள்ளத்தால் பழையதென்று மெய்க்கல்வியைக் கழித்துவிட்டு, அக்கல்விக்கு மாறான சிலவற்றைக் கல்வியெனும் போலிப்பேரால் கொண்டாடி வள்ளுவர் கொள்கையினின்று விலகுவதுபோன்றே அவரது திப்பிய வாய்மை இன்னுமொன்றையும் கையாளுகின்றார். கலைகளின் பெருமையைப் பலவாறு கட்டுரைத்துக் கொண்டாடுவோர் பெரும்பாலோர்; கற்பாருமில்லை, கற்க வைப்பாருமில்லை. கலைகளே உயிரென்பர்; ஆயினும் ஊனின் பொதிக்குரிய தொழில்களையே மேற்கொள்வர். அவ்வாறே, உழவே ஒரு நாட்டின் உயிர் என்பார், மற்று உழுவதையோ நீத்தகல இயலுமாயின் வெறுத்துதறி விலகுவதற்கே முற்படுகின்றனர். கைத்தொழிற் சாலைகளும், வர்த்தகத் துறைகளும் மிகமிகப் பெருகி இவைகளுக்கு இணங்கிய உத்தியோகக் கட்டிடங்கள் உயர்தலே, ஒரு தேயத்தினர் முன்னேற்றமடைந்து விடுதலை பெற்றுச் சுதந்தரம் அடைவதாகுமென்னு மொரு கூற்று உலவி வருகின்றது. ஆயின், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின் செல்பவர்" என்னுமக் குறள் யாதாயிற்று. மற்ற வெல்லாம் தொழுவது, என்று அத்தெய்வப் புலமையோர் விலக்கியபின், அடிமைத் தொழில்களை மேன்மேலும் ஊக்கமொடு வளர்ப்பதால் விடுதலையடைகின்றதென்னுமிவ் விபரீதச்சொற்களை என்னென்று வியப்பது!

கல்வியின் திறத்தில், உண்மைக்கொள்கையும் வாய்ப்பேச்சும் கைச்செயலும், முரண்படக் கொண்டுமுழங்கிச் செய்யப்படலாகின்றதேபோல், உழவின் கதியும் உழைத்து முடிக்கின்றது. ஆயினும் அதனைப்போல் இதனை நாம் இங்கு விரித்தெடுத் துரைக்கவேண்டா. கலைப்புலமையைப் பண்டிதர்க்கென்று விட்டுவிட்டு மற்றவர் வேறு சில கற்கவேண்டுமென்று அங்குச்சொல்வார், இங்கும் உழவின் வாழ்வை விவசாயிகளுக்கு மட்டுமே உரியதாக்கித் தாமும் தம்மனோரும் தொழுதுண்டு பிழைக்கவே முற்படுகின்றனர். "முன்னேற்றமடைந்துள மற்ற நாடுகளுக்கு இணையாக நாமும் இவ்வுலகில் தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமாயின், எல்லாரும் உழுது கிடப்பது எவ்வாறு பொருந்தும். சிலர் உழுவார். அவரே நமக்கு உயிர். அவர்களுக்கு நாம் ஓட்டுச்சீட்டில் குறியிடுதற்குவேண்டிய படிப்பைப் போதிப்பதற்காக "ஆரம்பப் பாடசாலைகள் அமைத்துத் தருவோம்.........மிகமிக முயன்று ஓட்டு உரிமையையும் வாங்கித் தந்துவிடுவோம்........" எனப் பரிந்து பேசிப்பேசித்தொழுகையைத் தலையிற்பூண்டதொழில்களில் உழல்வதற்கே உழைப்பது நேரிதாமோ. உழவும் பழையதென்று கழிக்கப்பட்டுவிட்டது. தொழுவதே புதியதென்று புகுத்தப்படுகின்றது. நிலத்தை விற்று அடிமையை இந்நாள் யாவரும் வாங்குமிம் மதி எங்கும் வெளிப்படையாய் விளங்குகின்ற தாதலால் இதுபற்றிப் பின்னுஞ் சில பகர்தல் மிகை. இந்தியா வறுமையுற்றிருக்கின்றது, என ஏங்குவார்; சுதந்திரமில்லை யென்பார்; இலம் என்று அசைஇ யிருப்பவரைக் கண்டு இந் நிலம்என்னும் நல்லாள் நகுகின்றனள்.



OFFI ... 1929 MADRA

இத்தனைக்குங் காரணம்வேறு எத்தனைஎத்தனையோ இருப்பினும் "பழையன கழிதலும் புதியனபுகுதலும் வழுவல" என்னும் அவ்வாக்கியத்தை வீணிற்கெல்லாம் எடுத்தெடுத்துச் சொல்லிவருவதும் ஒன்றெனநினைக்கின்றோம். 'வழுவல' என்று நன்னூலார் கூறினாரே யன்றிச் 'சிறப்புடைய'வென்று கூறினாரல்லர். உம்மையிரண்டும் எண்ணும்மையோடு இழிவுசிறப்பும் ஆம். கழிதலும் புகுதலும் தன்வினைகள் என்பது மறந்து கழித்தலும் புகுத்தலும் எனப்பிறவினைகளாக நினைத்து, எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்கின்ற அறிவை மேற்கொண்டு தரம் பார்த்தலின்றியே, பழையன பழையனவெனத் தேடித்தேடிக் கழித்தும், புதியனவென்று புகுத்தியும் விவகரிப்பதால் இம்மை மறுமை இரண்டும் இல்லையாகும்படி நிலமும் குலமும் நக உலகம் இன்று நிற்கின்றது. நன்னூல் முழுவதுங்கற்று, அது கற்பதற்குமுன் ஓதியிருக்கவேண்டிய இலக்கியங்களையும் உணர்ந்திருப்பவர் மட்டுமே அவ்விறுதிச் சூத்திரத்தை உபயோகப்படுத்துவராயின் அது, இவ்வகைத் தன் இலக்கணமும் உலகத்திலக்கணமும் சிதைந்தழிய இடந்தந்திராது.

## ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

### 4. மண்ணிற் கோரு கண்.

பொய்தான் தெவிட்டவில்லையே இப்புஜங்கனுக்கு! வானத்தையே வில்லாய் வளைத்தேனும், மணலைக் கயிறாய்த் திரித்தேனும், கன்னின்று நாருரித்தேனும், நீர்மேல் நடந்தேனும், கனல்மேல் திரிந்தேனும், மலையை மென்றேனும் கடலைப் பருகியேனும், காற்றைக் குடித்தேனும், எந்த விதத்திலேனும் சிங்காதனம் புகுந்து சக்கரமுருட்டிப் புஜங்கவேந்தன் எனும் பட்டம் கட்டிக்கொள்ள நிலைதரியாமல் பதைத்திருந்த இப்புல்லறிவன் விவகரித்ததெல்லாம் 'எத்தைத் தின்றால் பித்தந் தெளியும்' எனும் பான்மையனவாய்க் கிடந்தன மனமொன்று எண்ணியெண்ணி வாயொன்றுசொல்லிச்சொல்லிக் கையொன்றுசெய்துசெய்து, தன்வாழ்க்கையைப் பொய்நாறக் குழப்பி அச்சேற்றையே அழுகிய யாக்கையில் பூசி உழல்கின்றானிவன். 'ஈன்றோனைக் கொன்று அரசுரிமையை அன்றே கவர்ந்துகொள்' என்று வாசவனுக்கு இவன் ஆதியில் ஓதிய பாடம் என்னபயன் விளைக்குமென ஆராய்ந்திலன். வேந்தனைக் கொல்லுமாறு மைந்தனும் நேர்ந்தனன், என இவன் பஞ்சரவல்லியை வெருட்டியதும் நிசமன்று. இன்னபிழை இரண்டினில் முன்னரே வழுக்கியிரானாயின் ஒருவேளை இப்பொழுது இவன் திருடப் பார்த்திருந்த பட்டத்தைப் பேதையாம் சரபசூரன் துணைகொண்டு வேதபுரியில் கட்டிக்கொள்ளப் பெறினும் பெறலாம். ஆனாலோ, காதலரிருவரும் குரங்கு கரியாகச் சரயுவின் கரைதனில் சந்தித்தநாள், புஜங்கன் அவர்மாட்டுத் தனித்தனி சொன்ன சொற்களை அவர் ஒப்புநோக்க நேர்ந்ததால் இவனது கொடுமைக்கு எல்லை யில்லையென நிச்சயங் கொண்டனர். இந்த நிச்சயம் கொண்டதாலன்றோ அன்று மாலை வாசவன் தன்தந்தையை நந்தவனத்தில் கண்ணுற்றபோது புஜங்கன் கடாரப்படையுடன் வருவது, மேற்பூண்ட பகைமையா லல்லாது பிறிதொன்றிலது என மன்னன் எண்ணும்வண்ணம் சந்தேகமறச் செய்து வைக்கவும் ஆகியது.

ஒற்றர் கண்டதற்கும் புஜங்கனது கருத்திற்கும் ஒற்றுமை உணர இயலாமல் மயங்கிய சிங்கமுகன் மகன்சொல் கேட்டவளவில் ஐயந்தெளிந்து, "நான் படைத்த பூதம் என்னையே விழுங்க வந்ததோ!" என வியப்பொடு வெகுண்டனனாகி அன்னதை அடக்குமாறு ஒருபெருஞ் சேனையும் இச்சமயம் போக்கியுளன். புஜங்கனே பூதமாய் முடிந்த தன்மையே. ஆனால் பித்தத்திற்கு வைத்தியம் செய்யப்போய்ப் பேயனாய் ஆக்கிவிட்ட பொறுப்பு ஒருசிறிது சிங்கமுகனையும் சார்ந்துளது. அங்குமிங்கும் கறங்குபோலாடியாடி முடிவில் பேராசைச் சூறாவளி கிழிக்கக் கிழிந்து தானாகவே புஜங்கன் ஒருவேளை ஓய்ந்துபோய் இருப்பினும் இருக்கலாம். அதுவரையில் ஆற்றாது சிங்கமுகனே, "ஆசையெனும் காற்றில் அலைந்து நிலைதடுமாறிச் சுழன்றிடும் அவலக் கறங்கே,உனக்குயான் ஓர் சூத்திரம் மாற்றுகின்றேன்' என்று பொய்முடிச் சூத்திரமே போட்டுக் கடாரநாடு நோக்கிப் பறக்கவிட்டான். அதனாலல்லவோ அக்காற்றுடி, விட்டவனையும் வலித்துக்கொண்டுபோய்ச் சுழியுள் சேர்த்துவிட்டது. புஜங்கன் பற்றிய முயலுக்கு இல்லாத கொம்பு தன் முயலிற்குமாத்திரம் முளைத்துவிடும் என மன்னவன் மதித்ததொரு பேதைமையை மானுட இயற்கையின் நுட்பநிலை நுணிப்பவர் உணர்வர்.

சிங்கமுகன்செய்த தீவினையைக் கடிந்து தருமத்தை நிலைநாட்டும் ஏமாப்புடன் சரபசூரன் நடத்திய படை வேதபுரிசென்று அடையாமுன்னம், வாசவனுடன் வந்த ஏமாங்கதப் பெரும்படை இடைமறித்துத் தடுத்தது. இன்னவாறு தான் முடியும் சூடுதற்குமுன்னரே போர்விளையும் என்று புஜங்கன் கருதியிலன். எவ்வெவ்வினை அவன் சூழ்ந்தாலும் அவ்வவ்வினை கருதியவாறாகாமல் இடையூறுற்றுக் கெடநேர்வதை நினைத்துப் பின்னும் அழுங்கினான். எதிர்வரும் படைதனை நோக்கிப் புஜங்கன் அதிர்தரும் அகத்தினனாகித் தன் நூதனநண்பனை நண்ணிப் பரிவினோடும் அவனிரு கரங்களையும் பற்றிச் "சரப, சிங்கமுகனது வெம்படை நம்முன் சேர்கின்றது. இதனைவென்று கடந்தாலல்லாது வேதபுரி யடைவதும் நின் வாய்மையைக் காப்பதும் இயலாதுகாண். அணிவகுத்து இங்கு அமர்கருதி நிற்போம்," என்றனன்.

345 பக்கத் தொடர்ச்சி

"ஐய, அமர்செய்யுமுன் யானென்று எண்ணுகின்றேன். எதிர்த்திடும் இச்சேனையின் தலைவன்மாட்டு ஒரு தூதனை அனுப்பினாலென்? அனுப்பி, அவ்வரசன் உனக் களித்திருந்த வாக்கதனை நினைப்பூட்டி இந்நாட்டின்திறம் நின்பொருட்டு இங்கும் கேட்போம். ஒருவேளை அதற்கிணங்கி அவர் போரொடுங்கிப்போகினும் போவர். இத்தூது எம்மரசன் புவனேச்வரனது ஆணையொடு அனுப்புகிற்பேன்."

"நன்றுசெப்பினாய் நண்ப, நன்றுசெப்பினாய்! மெய்யுரையும் அறநெறியும் ஒன்றாக மதிப்பவன் சிங்கமுகனே! எதுகைக்கு அலையும் ஏழைக் கவியொருவன், நீரங்குச் சிரித்தீர் எனப் புறங்கூறியதற்கு மாறாகப் போர்வேண்டி என்னை நம்பால் போக்கிய அக்கடுஞ்சினக் காவலன் சாமத்திலே இணங்குவதும் கூடுமோ! ஆதலால் இப்படையுடன் நமக்குப் பகையன்றி உறவு வேண்டோம். வாள்களே வாள்களுடன் தூதுபேசிப் பொருதிடுமாறு புரிவோம். அவனிழைத்த பழிக்கு மாறாக நாம் பகழிகளே தூற்றுவோம்."

தூதநாதம் செய்த ஒரு சங்கின் குரல் இச்சமயம் இவர் செவியில் பட்டது. திரும்பிப்பார்க்க ஏமாங்கதச் சேனையிலிருந்து ஒரு தேர் பிரிந்து இவரிருந்த முகமாக முன்னேகக் கண்டனர். காண்டலும் சரபசூரன் "புஜங்க, அவர்தாமே தூதனுப்புகின்றனர். அவனுரைகொண்டு நின் வேந்தனது மனம் உணர்வேன்: போரிலாமலே நம் கருத்து முற்றினும் நல்லதே" எனப் புஜங்கன் "அவனுக்குச் செவிகொடேல் சரப, 'போரிட வந்தேனன்றி நின் புன்மொழி கேட்க இத்தூரம் படைக்கோலம் கொண்டிலேன்' என்று அத்தூதனுக்குத் தெரியச்சொல்லித் திருப்பிவிடு. நண்ப, அவனுக்கு முகங்கொடேல். கருமமே கண்ணாயின நாம் வாய்பேசிக் காலங்கழித்தல் அழகன்று' என்று இயம்பி அவ்விடம்விட் டகன்றுபோயினான். வருந் தேரை வரவேற்கச் சரபசூரன் தன்சேனையின் முன்புறம் சென்று படைத்தலைவன் தானே என்பது குறிக்கும் கொடியை அருகில் நாட்டி நின்றனன். எதிர்நடந்த இரதமும் அவனைக் கடவாமல் நின்றது. நின்ற தேரிருந்து வாசவக்கோமகன் நெடுவேலை நிலத்தூன்றி இறங்கினான். இறங்கிய வாசவன் சரபசூரனுக் கருகுசென்று, "ஐய, இச்சேனையின் தலைமை பூண்ட வீரனும் நீயென நின்புடை யாடும் கொடிபாடையினால் உணர்கின்றேன். நம்முடன் கேண்மை கொண்டு இத்தூரம் உந்திவந்த நின்னரும் நண்பன் யாங்குளன்?" என்று வினவினான்.

"ஆம், கடாரக்கோமான் போராற்றல் புவனேச்வரனது பணிமேற்கொண்டு இப்படையுடன் எழுந்துளேன். சரபசூரனும் என்பேர். ஏமாங்கதத்தரசன் நின்வயின் யாதுசெப்பிப் படையுடன் தூதும் போக்கியுளான், கூறுதி."

"போர் இடுதற்கு நீ இங்குப் போந்ததன் காரணம் எந்தை அறியானாதலால் என்பால் யாதும் குறித்திலன். எம்வயின் யுத்தமே நீ இரப்பதாயின், உன் வேட்கையின் மேற்படவே அளித்திட யான் உளேன். எனினும், நின்பால், நின்னரசன்பால், நின் தேயத்தின்பால் எமக்குப் பகையேதும் இலது. உன்னரசனோடு இணையகலா நேயமொடு நிற்கவே விழைகின்றோம். புஜங்க னென்றொரு புல்லிய குணத்தினன் போவாவிற்குப் பெருந்துணையாய்ப் படைதொடுத்துப் போந்துளாய் ஆயின், உன்வீரம் பழுதுபடப் பொருதுனர்தம் பழக்கத்தால் எய்தும் தீமைக்கு இலக்காவாய்"

"என் வீரம் காக்கும் வன்மை எனக்குளது. நீ தூற்றும் அப்புஜங்கன் இக்காலம் எனது நண்பனாய் அமைந்துளான். ஆதலால் அவனை என்முன் யாரும் பழிக்கத் தரியேன். வெறுசில சொல்வதற்கு உன்பால் உளதாயின் சொல்லி முடித்திடு."

"நம்மிருவர்க்கும் இந்நட்பு நடந்தவிதந்தான் என்னவோ? ஐய, சரபசூர, அப்புஜங்கன் எத்தொழிற்கு மஞ்சாப் பாதகனாவான். உனதுயிரையும் புகழையும் மென்றுமிழும் ஒரு புழுவுடன் உறவு கொண்டாய். கொன்னே நின்னருஞ் சேனையை மாய்வித்து, நம்பியநின் னட்படங்கலு மரைக்காசிற்கு விற்றுச்செல்லு படுகேடன் அத்துரோகி. என் கோத்தந்தையை வஞ்சித்து உன்னுறவு நாடியவன் நட்பிலும் உறுதியுண்டோ!"

"வேந்தன் மைந்தன் வாசவனோ நீ? எனின், நான் கேட்கும் இரண்டொரு கேள்விகளுக்கு வாய்மைகடவாது விடை செப்புவாயாயின் மேற் செய்வது யாதெனச் சொல்வேன்"

"உண்மையே உணர்த்தும் உத்தரம் உரைப்பேன், கேள். போரிலாது ஒழிதலே அதன் பயன் ஆதல் வேண்டும்."

"தானாளும் தரணியி லொருபாதி புஜங்கனுக்குத் தருவன், என உன்னரசன் செப்பியதுண்டோ?"

"உண்டு"

"பின், கொடாது மறுத்ததும் உண்டோ?"

"உண்டு இல்லை யென்பது, யானறியேன்?"

"ஏமாங்கதத் திளவரசே, புஜங்கனுக்கு ஒரு நாடு உன் தந்தை கொடுத்தது மறுத்தது எதுவாயினும் ஆகுக. வேதபுரிக்கரசனாய் நானே அவனை ஆக்கிவைக்கின்றேனென்று வாக்கு வழங்கியுளேன். அதனை நிலைநிறுத்துமாறு நீ ஒவ்வினால் பிறகு போரில்லை."

"ஐய, இதனால் எனக்குரிய மண்தலம் பகிர்ந்திடும் என்று தளர்கின்றே னல்லேன். கைதவக் கள்வன் சார்பு நின்று நீயுன் ஆண்மையை அழிக்கின்றாய். அல்லாது, எந்தைமன முணராமல் இன்னதற்கு நான் ஒவ்வுவது எங்ஙனம் அமையும்?"

"அமையாதெனில் விஞ்சியது வெம்போர் ஒன்றே. வாசவ, பகலும் நாழிகை ஒருபத்து உளது. இன்றே இங்ஙனே போரும் புரிந்திடுவோம். வேதபுரி இருப்பதும் காவதம் இரண்டினி லன்றோ. இன்றன்னை வென்று நாளையே புஜங்கனுக்கு அங்கு மகுடாபிடேகம் ஆட்டிவைக்க நினைத்துளேன். மானுட முயற்சியால் அது செய்துவைப்பது என் கடன்."

"தீயதாம் இம்முயற்சியைத் தெய்வம் ஐயமின்றித் தடுக்கும். ஐய, சரபசூர, பெரும்போர்க்கு எழுக," என்று வாசவன் இயம்பி அகன்றனன்.



# மாறன் பாப் பாவினம்.

[348-வது பக்கத் தொடர்ச்சி]

எமது நண்பர் ஸ்ரீமான் V. விஞ்சித்தம்பி இந்நூலின் வரலாற்றைப்பற்றிப் பின்வருமாறு வரைகின்றார்:—

1. இந்நூற்காசிரியர்:— மாறனகப்பொருள்: மாறனலங்காரம்: திருப்பதிக்கோவை! திருக்குருகாமான்மியம்: மாறன் கிளவி மணி மாலை: நம்பெருமான் மும்மணிக்கோவை: முதலிய வைணவநூல்களியற்றிய திருக்குருகைப் பெருமாள் கவிராயரென்பது, மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும் வெளிவரும் செந்தமிழ்ப் பத்திரிகை (தொகுதி 27: பகுதி 1-ல்) உதவிப் பத்திராதிபராற் பிரசுரிக்கப்பட்ட "மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்" என்ற தலைப்பின்கீழ்க் குறிப்பாற் புலனாம்:

2. மாறனலங்கார வரலாற்றிற் கண்டபடி இவ்வாசிரியர் வரலாறு, பின் வருமாறு:—

பெயர்:—திருக்குருகை யென்னும் "ஆழ்வார் திருநகரி"யிற் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் நம்மாழ்வாருடைய ஆஸ்தான கவிராயரா யிருந்தமையால் இவருக்குத் "திருக்குருகைப் பெருமாள் கவிராய"ரென்னுங் காரணப் பெயராயிற்று: இவரது இயற்பெயர், சடையன்.

தகப்பனார்:—இவர் தகப்பனார் பெயரும் திருக்குருகைப் பெருமாள் கவிராய ரென்பதேயாம்.

சாதி:— வைசிய வகுப்பைச் சேர்ந்த வேளாளர்.

ஊர்:—ஆழ்வார் திருநகரி. என்னை?

பெருநிலம் புகழ்திருக் குருகைப் பெருமா
னருள்குரு கூர்வரு மனகன் செழுந்தேன்
மருக்கமழ் சீரகத் தார்வணி கன்புகழ்த்
திருக்குரு கைப்பெரு மாள்கவி ராயன்
அருட்குணத் துடன்வளர் சடையன்
பொருட்டொடர் நலம்புணர் புலமை யோனே
(மாறன லங்காரப் பாயிரம்) என்றாராதலின்:

மதம்:—வைணவம்.

ஞானாசிரியர்:—ஸ்ரீநிவாச யியர்;

"சிற்குணச் சீனி வாதனின் னருளா
னற்பொருண் மூன்றைபு நலனுற வுணர்ந்தேன்"
(மா. அ. பாயிரம்)

இவர் செய்த வேறு நூல்கள்:-மேற் காட்டப்பட்டன.

காலம்:—இவர் காலம் இன்னதென்று சரியாய்த் தெரியாமற் போனபோதிலும், இவராற் செய்யப்பட்ட திருக்குருகா மான்மியமென்னும் நூலால் ஒருவாறு நியமிக்கலாம்: அச்செய்யுள் வருமாறு,

அறந்திக ழாண்டவை யெழுநூற் றிருபான் மூன்றி
லணிகிளர் கார்த்திகை மாதமெட்டில் வாழ்வு
சிறந்திடுந் திங்களி னாளுத் தரத்தி லேகா
தெசியின் மகாமு கூர்த்தந் திருந்த முற்றத்
துறந்தவரெண் மகிழ்மாறர் திருமுன் னாதிச்
சுருதியுடன் மிகுதியுஞ் சொற்றமிழின் வாய்மை
பிறந்தபெருங் காப்பியமுந் தெரிந்தோர் கேட்கும்
பெற்றியுட னரங்கேற்றப் பெற்ற தன்றே.

இதிற் குறிப்பிட்டுள்ள வருஷம் கொல்லம் ஆண்டு 723. இப்போது கொல்லமாண்டு 1104 நடப்பதால் இற்றைக்குச் சற்றேறக்குறைய 381வருடங்களுக்குமுன் இருந்தவரென்று பெறப்படுகின்றது.

3. இவர் பெருமை:—இவர் பாலியத்திலேயே திகண்டு, இலக்கண இலக்கிய, முதலியனவற்றை ஐயந்திரிபறக் கற்றுச் சிறந்த வித்துவானாகி, மற்றைப் புலவர்போல் மன்னர் மீது கவிபுனையாது, நம்மாழ்வார்மீது அளவுகடந்த பக்தி மேலீட்டினால், தாமியற்றிய நூல்களெல்லாம் நம்மாழ்வார் மீதே புனைந்தும், வித்துவான்களுடன் வாதஞ்செய்தும், அரசராற் சன்மானிக்கப்பெற்றும், தமிழை அபிவிருத்தி செய்தும், சிறந்த வீர வைணவப் புலவராய் விளங்கினார்.

இவர் விஷயமாய் அபியுக்தர் அருளிச்செய்த செய்யுள் வருமாறு:—

நேற்றுப் பிறந்து வரும்பா வியான நிலாநெருப்புக்
காற்றும் படிதொங்க றந்தில னேயருட் கூடற்சங்கந்
தோற்றும் படிசொன்ன சொன்னூற்பத் தொன்பதை
[யைம்பதென்று
சாற்றுந் திருக்குரு கைப்பெரு மாணஞ் சடைக்குட்டியே

4. அன்றியும்,

மாறனலங்கார வரலாறுடையார் தமதுரையில், மாறன் பாப் பாவினமென்னுநூல், மாறனலங்கார நூலுரையாசிரியராகிய, ஆழ்வார் திருநகரியையடுத்த தென்றிருப்பேரைப் பதியிற் பிறந்த காரிரத்ன கவிராயராற் செய்தருளியதாக எண்ணப்படுகின்றதென் றெழுதியிருக்கிறார். இவர் சிறந்த உரையாசிரியரே யென்பது இவர் இயற்றிய பிறநூல்களாற் பெறப்படும். இவர் மாறன் பாப் பாவின மியற்றியிருக்கக் கூடுமோ என்பது பெரிதுஞ் சந்தேகத்திற் கிடனேயன்றித் தெளிவா யில்லை.

5. போதிய ஆராய்ச்சியோடு செந்தமிழ் உதவிப் பத்திராதிபர் மாறன் பாப் பாவினத்து ஆசிரியர் திருக்குருகைப் பெருமாள் கவிராய ரென்னுங் கூற்றே,ஆதலின் தற்போது ஏற்புடைத்தென்க.

## ஆசிரியப் பாவினம்

### ஆசிரியத்தாழிசை.

கஞ்சத் திருமால் கழல்பரவு மாறனார்
செஞ்சொற் றிருவாய் மொழியுணர்ந்த சீலத்தார்
வஞ்சப் பிறவி வலைப்பட் டுழலாரே. (1)

ஆயத் தகுமா லடிபரவு மாறனார்
நேயத் திருவாய் மொழியுணர்ந்த ஞானத்தார்
மாயப் பிறவி வலைப்பட் டுழலாரே. (2)

தந்திக் கருண்மால்பொற் றாள்பரவு மாறனார்
சிந்தித் துரைத்ததிரு வாய்மொழிதேர் சிற்குணத்
வந்திப் பிறவி வலைப்பட் டுழலாரே. [தார் (3)

இவை மூன்றடியாய்த் தம்முளளவொத்து, ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையாலாசிரியத்தாழிசை. இதுவுந் திணையுந் துறையு மலங்காரமு மது. 1

### ஆசிரியத்தாழிசை

இருநில மூவடி யெனவளந் தோங்கிய
திருமறு மார்பனைச் சிந்தையுள் வைப்பவ
ரொருபொழு தினுமிட ருறுவதொன் றிலரே.

இது, தனியே வந்த வாசிரியத்தாழிசை. திணை, துறை அலங்காரமுமது. 2

### ஆசிரியதுறை

அலைபயில்பாற் கடல்கடைந்தன் றமுதளித்த
திருவரங்கத் தமுதையேத்துங்
கலைபயின்வண் டமிழ்க்குருகூர் மகிழ்மாறன்
[illegible] கட்படர்ந்தீர்
முலையெனுமான் மதக்களிற்றின் முன்னிறுத்தி
வினையேனைக்
கொலைபயில்வேல் விழிபுதைத்த தறிவிலையோ
வறநிலையோ * கூறுவீரே.

இது, நான்கடியா யீற்றயலடி குறைந்து அல்லாதவடியொத்த வாசிரியத்துறை. பகுதி—பாங்கற் கூட்டம்.

* "மறநிலையோ" என்றிருக்கலாம்.

துறை—நாணிக்கண் புதைக்க வருந்தல். அலங்காரம்—சங்கீரணம். 3

ஆசிரியத்துறை

திரைத்திருப்பாற் கடல்கடைந்து தெள்ளமுதும்
பருக்களித்த திருமால் செய்கை
யுரைத்திருப்பா ரிடத்திழைத்த வூழ்வினை
சென்றணுகாதென் றுரைப்ப தொன்றோ
வுரைத்திருப்பா ரிடைத்திழைத்த வூழ்வினைசென்
றணுகாமை
வரைத்திருப்பா ரிடத்திழைத்த வல்வினையும்
வரைத்தவர்பான் மருவா தன்றே.

இது, ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வந்த வாசிரியத் துறை. திணை—பாடாண். துறை—கடவுள் வாழ்த்து. அலங்காரம்—கல்விபற்றிய பெருமிதம். 4

ஆசிரியத்துறை

வண்ண மகிழ்மாறன் மால்வரைமா னனைத்துட்
கண்ணென் றிகல்புரிவன் கூற்றினையேன்
வைத்தானென் கண்ணுளானுங்
கண்ணென் றிகல்புரிவன் கூற்றினைவைத் தாலயலா
ருண்ணின் றுயிர்கவர்வ துள்ளாதென்
வெளிவிட்டா ரூானுள் ளாரே.

இது, நான்கடியா யிடையிடை குறைந்து மிடைமடக்காயும் வந்த வாசிரியத்துறை. பகுதி—இயற்கை. துறை—தகையணங் குறுத்தல். அலங்காரம்—அவயவி யுருவகம் 5

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நேடுவான் கலைவயிரத் திழைத்தபருப்
பதக்குடுமி நீவ நாளும்
ஓடுவான் மதியகட்டி னுறாபிணையைப்
பிணையெனக்கொண் டும்பர் வாவக்
கோடுவார்ந் திழிதருதெள் ளமுதவரு
வியிற்குழுமிக் கொடிய ஞரே
யாடுவார் மைந்தருமுண் டுண்பதுமத்
தெள்ளமுதே யவர்க ளுளும்.

இது, அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த வாசிரிய விருத்தம். திணை—பாடாண். துறை—நாடுவாழ்த்து. அலங்காரம்—திரிவதிசயம். 6

அறுசீர்க் கழிநெடிலடி வாசிரிய விருத்தம்

படியின்மேற் படிந்தகதிர்ப் படைமீது கிளர்களையாம் பனிவண் டாடிக்
கடியுணீ லமுதறமென் கமலமுஞ்சாய்ந் துடன்கிடந்த காட்சி கூறி
னடியுமா கமுந்தழுவிக் கொழுநரொடுங் கலவியினி லழுந்தி யோர்தம்
முடியுமே தகவுடைநன் முகந்துறவைத் துடன்றுயிலு முறையே போலும்

இதுவுமது, துறையுமது, அலங்காரம்—ஒரு வயிற்போலி. 7

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திறந்தழைவான் கதிருணங்க வங்குரித்தன்
குடன்வளர்ந்த நீர்மைத் தாகுந்
திறந்தழைசெங் கமலமுமிந் தீவரமு
முடனுணங்குஞ் செயலுந் தீந்தேன்
வறந்தரவண் டினந்துறந்த செய்கையுநீ
ரவருறவின் மாண்புங் கள்ளுண்
டறந்தவறித் திரிகளிய குறவினிழி
வையுமுணர்ந்து மமைதித் தாமே.

பாவினமு மிதுவுமது. துறையுமது. அலங்காரம்—நிதெரிசனம். 8

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

காழகிற் பொழிலுஞ் சந்தனப் பொழிலுங்
கமழ்நறுஞ் சண்பகப் பொழிலுங்
கோழரைக் கமுகு நாளிகே ரமும்பொற்
கோங்குவேங் கையுமலர்க் குருந்து
மாழையஞ் சுளைமுட் புறக்கனிப் பலவு
மாவுநா கமும்பணை மருதுந்
தாழையு மகிழும் வாழையுங் கரும்புந்
தனித்தனி தழைத்தலெம் மருங்கும்.

இது, எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த வாசிரிய விருத்தம். 9

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மரவமுங் கடமும் பனசமும் பிடவும் வடமுமா
தலியுமா தளமுங்
குரவமு மிலவுந் திலகமும் விளவுங் கொன்றையுஞ்
செருந்திலுங் குமிழு
மரசுநா வலுந்தான் றியுமரீ தகியு மாமல
கமுநரந் தமுமாம்
பிரமுமே லமுமரா மரமும்வே ழமுஞ்சம் பீரமுந்
துவன்றசால் பினவே.

இதுவுமது. 10

எழுசீர்.

வள்ளையங் கொடியு முல்லையும் விரைமென்
மயிலையு மொருபுடை மயங்கிக்
கொள்ளைவண் டினம்பாண் முரன்றது பதத்தாற்
குடைந்துதே மதுமடை திறக்கு
முள்ளுடைக் கொழுந்தாட் கமலமும் விரவி
முறுக்கவிழ் குவளையு மிரவின்
விள்ளிதழ்க் குமுதத் தொகுதியும் பகுதி
விளைக்கும்வா விகள்பல பலவே.

இதுவுமது, இவை மூன்றும், துறை - நாடுவாழ்த்து, அலங்காரம் - இடத்தன்மை. 11

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தாழிதடங் கடலநடா யொலிக்குந் தண்ணக்
தளிதருதீம் பாறயிராய்த் தலைப்பெய் கோவாப்
பாழிநெடுங் கிரியெனு மந்தர மத்தாகப்
படநாகம் வடமாகப் பரந்த தேவர்
வாழியிருந் தெள்ளமுதங் கடைநா ளாழ்ந்த
வயிரவரை யிணைக்கமட வடிவா யேந்து
மாழிபுனைந் தெழுதடக்கைப்பெம்மான் றொண்டர்க்
கடியவரா நிலைமைபரென் னடிக ளாவார்.

இது, எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த வாசிரிய விருத்தம். துறை - கடவுள் வாழ்த்து. அலங்காரம் - வினைத்தன்மை. 12

எண்சீர்.

வெற்றாறென் றிசையாது சாவா மூவா
விழுமருந்துண் டிறக்க மேய்வா னோரைச்
செற்றானென் றிசைகனக னிங்கு ளானோ
சிறுவவென மதுகைநர சிங்க மாகிப்
பொற்றானெட் டகடுகிழித் தவன்ற னுகம்
போழ்ந்துகிரா லளைந்துகுடற் புண்ணீர் மாலை
கற்றானம் பொருவுதிர டிண்டோள் வேய்ந்த
கருணைவரைக் கடிமைசெயுங் காட்சி யாரே.

இதுவும், எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த வாசிரிய விருத்தம். துறை - கடவுள் வாழ்த்து. அலங்காரம்-அவயவ வுவமை. 13



எண்சீர்.

தேனிலங்கும் பைந்தாம மாலை மார்பிற்
றெசரதனன் மகவாகித் திண்கான் மேவி
வானிலங்கொ ளெழுமரா மரமும் வாலி
மார்பகமு மிலங்கேசன் மவுலி பத்து
நானிலத்தன் றிழிதரவோர் வாளி தூவி
நன்னுதலா ளுடன்கூடி யிளவ லென்போன்
றுனிலங்கா புரம்புரப்பக் களித்த வென்றித்
தனுராமன் றனக்கடிமை தழைந்து ளாரே.

இதுவும், எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த வாசிரிய விருத்தம். துறை—கடவுள் வாழ்த்து. அலங்காரம்—வீரம்பற்றிய பெருமிதம். 14

எண்சீர்.

உடைமணியுங் கிண்கிணியுங் கறங்கா வண்ண
மொதுக்கிமழ வொன்றுடனு ரெற்ற நோக்கி
யிடைமகளிர் மனையிடைபுக் கதன்பொற் றோண்மீ
தேறிநிமிர்ந் திடக்கையுரி பிடியா மற்றைப் [தப்
புடைமலர்க்கை கொடுவெண்ணெய் தொடுவுண்டந்
புதல்வனுக்கும் பகுந்தருத்திச் சிங்க நோக்கிற்
கடைநயன மணிவாயில் பற்ற நின்ற
காட்சிநினைந் தாடுவார் பாடு வாரே.

இதுவுமது. அலங்காரம்—வினைத்தன்மை. 15

ஆசிரியப்பாவினமு
முற்றிற்று.

# அப்பர்

## 4. பெரியபுராணத்தில் காணாத திருப்பதிகளில் அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பங்களும்

348பக்கத் தொடர்ச்சி

பெரியபுராணத்தில் அப்பர் தரிசித்துப் பாடியன வென எடுத்துக்காட்டியுள்ள பல திருப்பதிகளில்சுமார் பதினைந்து திருப்பதிகளிலே, அப்பர்பாடிய திருப்பதிகங்கள்மறைந்து போயின. அவையாவன, திருமாணிக்குழி திருத்தினைநகர் திருவெண்ணெய் நல்லூர் என்னும் தென்ஆற்காடு ஜில்லாவின் திருப்பதிகள்,தஞ்சை ஜில்லாவிற் காணக்கூடிய திருக்கோலக்கா திருக்கருப்பறியலூர் திருத்திங்களூர் திருநாலூர் திருநறையூர் திருவேள்விக்குடி இவற்றில் பாடிய பதிகங்களுமாம். திருமணஞ்சேரி யென்பது கீழ்மணஞ்சேரியென்றும் மேல்மணஞ்சேரி யென்றும் இரண்டு நகராய் மிகவும் அருகே யிருப்பதாலும், கீழ் மணஞ்சேரிக்கு எதிர்கொள்பாடி என்னும் நாமம் உளதாலும், திருமுறையில் காணப்படும் திருமணஞ்சேரித் திருக்குறுந்தொகை எதிர்கொள்பாடியதோ என்பது சந்தேகத்திற்கு இடங்கொடுக்கின்றது. அறிஞர் அத்தலபுராண முதலிய நூல்கள் வாயிலாய் ஆராய்வாராக.

இவையன்றியும், பாண்டிய நாட்டைச் சார்ந்தும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள திருநெல்வேலி திருக்கானப்பேர் என்னும் ஸ்தலங்கள்மீதிலும், வாரணசியின் *பேரிலும் அப்பர்பாடிய பதிகங்கள் மறைந்தன. † பெரியபுராணத்தில் சேக்கிழாரால் மொழியாதன திருமுறைகளில் பல உள. அவர் மொழியாதனவும் திருமுறைகளில் காணப்படுகின்றனவுமான திருப்பதிகள் எவை என்பது மாத்திரமன்றி எக்காலத்தில்அப்பதிகங்கள் அப்பர் பாடினர் என்பதை அநுமானிக்க அப்பதிகங்களில் யாதேனும் ஆதரவு உளதோ என்பதும் ஆராய்வோம்.

அப்பர் பாடிய பாசுரங்கள் எத்தனை? இவ்வினாவுக்குப் பற்பலர் பற்பல எண்களைக் கொடுப்பார். ஆயினும் சரியென்று உறுதியாய்க் கூறத்தக்கது ஒன்றே. அது சுந்தரமூர்த்தி நாயனரால் கொடுக்கப்பட்ட சங்கை (எண் * 9800). அப்பர்காலத்திற்குச் சற்றேறக்குறைய 1½ நூற்றூண்டுக்குள் வசித்தவராதலாலும், சைவசம்பந்தமான நூல்கள் கரைகண்டவரும், சம்பந்தர் அப்பர் பதிகங்கள்யாவும் அறிந்திருக்கக்கூடியவரும் இவரேயாதலாலும், இந்த இலக்கம் சரியல்லவென்று எவராலும் சொல்லமுடியாது. திருமுறைகளில் அபின்னமாய் நிற்கும் பாசுரங்கள் அப்பர் முதல் திருமுறைகளில் 1070, இரண்டாம் திருமுறையில் 1013, மூன்றும் திருமுறையில் 976, ஆகமொத்தம் 3059, பாசுரங்கள் அப்பர் திருமுறையில் உளவாதலால், வான்மீகத்திற்குத் தப்பியவை மூன்றிலொரு பாகமென நாம் ஆமோதிக்கலாம் †.

அப்பர் திருமுறைகளில் காணப்பட்ட திருப்பதிகள் 132. அவற்றுள் திருக்கைலாயம் ஒன்றை நீக்கி மற்றவையாவும் அப்பர் நேரில் தரிசத்தனவென்பதற்கு அப்பதிகங்களின் பாசுரத்திலேயே பல அகச்சான்றுகள் ஆங்காங்குக்கிடைக்கின்றன. ஆதலால்இப்பதிகள் அப்பர் நேரிற்சென்று தரிசித்தனவே. இவற்றுள் நூற்றெட்டு பெரியபுராண வரலாற்றில் காணப்பட்டன. ஏனைய திருப்பதிகள் திருமுறைகளில் மாத்

* மண்ணிப் படிக்கரை வாழொளி புற்றூர்
வக்கரை மந்தாரம் வார ணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி
விளமர் விராடபுரம் வேட்க ளத்தும்
பெண்ணை யருட்டுறை தண்பெண் ணாகடம்
பிறம்பில் பெரும்புலியூர் பெருவே ளூரும்
கண்ணை களர்க்காறை கழிப்பா லையுங்
கயிலாய நாதனையே காண லாமே.

க்ஷேத்திரக்கோவை, திருத்தாண்டகம் 6

† காசியை வைப்புஸ்தலமாய் நாம் எடுத்துக் கொள்ளுகிறோம்.

* அணிகொ ளாடையம் பூணணி மாலை
யமுது செய்தமு தம்பெறு சண்டி
இணைகொ ளேழெழு நூறிரு பனுவல்
ஈன்ற வன்திரு நாவினுக் கரையன்
கணைகொள் கண்ணப்ப னென்றிவர் பெற்ற
காத லின்னரு ளாதரித் தடைந்தேன்
திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்
செல்வத் தென்திரு நின்றியூ ரானே
—சுந்தரர் (திருநின்றியூர். பண்-தக்கேசி)

† முதல், இரண்டு, மூன்று என்று அப்பர் திருமுறைகளைக் குறித்தமை 4, 5, 6-ம் திருமுறைகளெனக் கொள்க.

திர முள்ளவை. எவ்வெவை உரையிற்கோடலால் சேக்கிழார் கூற்றுடன் தொடுக்கக் கூடுமென்பதை ஆராய்வோம். முன் கூறியுள்ள முறையாய் நமது இராஜதானி ஜில்லாக்களில் ஒவ்வொன்றிலும் காணக் கூடிய இத்தகைய திருப்பதிகளை அவ்வொழுங்கிற் காண்போம்.

### 1. தேன் ஆற்காடு ஜில்லா ஸ்தலங்கள்

(i) நெல்லிக்குப்பம் ஸ்டேஷனுக்கு வடமேற்கே ஒருமைலில் திருமுண்டீச்சரம் என்னும் திருப்பதியுளது. இதில் அப்பர் பாடிய திருத்தாண்டகப்பதிகம் ஒன்று,பத்துபாசுரங்க ளமைந்ததைத் திருமுறைகளிற் காணலாம். இரண்டு சந்தர்ப்பங்களில் அப்பர் இதைத் தரிசித்திருக்கலாம். அவையாவன, திருப்பாதிரிப்புலியூரில் கல்லின்மேல் மிதந்துவந்த அப்பரை அவ்வூர்ச் சிவனடியார்கள் வரவேற்றகாலத்தில் திருப்பாதிரிப் புலியூரினின்று இவ்விடம் சென்றிருக்கலாம். ஆயினும் சேக்கிழார் இவ்விடத்திலிருந்து திருவதிகைக்கு அப்பர் சென்றனரென்பதால் அக்காலத்திய பாடல் என்று திருமுண்டீச்சரத் திருத்தாண்டகத்தை மொழிய இடமில்லை. * சேர்கிழார் கூற்றை நோக்குக. திருவதிகைநின்று தெற்கே யாத்திரை புறப்பட்ட காலத்தில் திருவாமத்தூர் திருக்கோவலூர் முதலிய பதிகள் பிறவும் வணங்கி, "வளத்தமிழ்" பாடிப் பெருவிருப்புடன் பெண்ணாகட படைந்தார் †என்று சேக்கிழார் கூறுவதால் அக்காலத்தில்பாடிய திருப்பதிகளில் திருமுண்டீச்சரம் ஒன்றெனக் கொள்ளலாம். "சிவலோகன் காணவனென் சிந்தையானே" என்னும் முடிவுடைய திருத்தாண்டகப் பாசுரங்கள் சிவபராக்கிரமத்தைவிளக்கும். "உணர்ந்தார்க்கென்றும்தேனவன்" என்றும், "உற்றவன்கா ணுறவெல்லா மாவான்றான் காண், ஒழிவற நின்றெங்கு முலப்பிலான்காண்' என்றும் பாடினர். அவர் "அல்லல் அறுத்தவ னென்றும், அறம்பொருளாய் நின்றவ" னென்றும் பத்தாம் பாசுரம் குறிக்கும். இதில் 9-ம் பாசுரமாத்திரம் வான்மீகத்தில் மறைந்ததாதலால் 9 பாசுரங்களே நமக்குக் கிடைதன. இப்பதிகம் பாடியது வெள்ளம் ஆற்றில் பாயும் முன் பனிக்காலமென் றனுமானிக்கலாம்¶.

(ii) திரு ஓமமாம்புலியூர், திருக்கடம்பூர் என்னும் இரண்டு திருப்பதிகளுக்கும் அப்பர், சீர்காழிக்குச் செல்வதற்கு முன்னர்ச் சென்றிருக்கவேண்டும். திருநாரையூருக்கு மேற்கே 8 மைலில் மேலைக்கடம்பூரென்னும் திருக்கடம்பூ ரிருக்கின்றது. இதற்கு 4 மைலில் தென்கிழக்கில் திருவோமமாம் புலியூரிருக்கின்றது. * தென் ஆற்காடு ஜில்லா ஸ்தலங்களைச் சம்பந்தர் தரிசித்துச் சீர்காழிக்கு மீண்டபோது திருவோமமாம் புலியூர்வழி வந்ததாய்ச் சேக்கிழார் கூறுவதால், அப்பரும் அம்மார்க்கமே சென்று சீர்காழி அடைந்திருக்கலாம் †.

திருவோமமாம் புலியூரென்பதை ஓமாம்புலியூரென அப்பர் கூறுகிறார். இப்பதியில் சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் திருத்தாண்டகப் பதிகமொன்றுமே நமக்குக் கிடைத்தவை. இவ்வூர் காரணப்பெயரால் வழங்குவது. "நள்ளிருள் யாம நான்மறை தெரிந்து நலந்திகழ் மூன்றெரி யோம்பும், ஒள்ளியர் வாழும் ஓமமாம்புலியூர்" என்றார் சம்பந்தர். அங்ஙனமே ‡ அப்பரும் "உருமிக்க மணிமாட நிலவுவீதியுத்தமர் வாழ்" இவ்வூரையும் வியந்து பாடினர். இதில் 9-ம் பாசுரமென்று காட்டப்பட்டது இராவணன் மலையெடுத்த விஷயம் கொண்டிருப்பதால் அது 10-ம் பாசுரமாயிருத்தல் வேண்டும்.

திருக்கடம்பூரில் அப்பர் பாடிய திருக்குறுந்தொகைப் பதிங்கள் இரண்டு திருமுறைகளில் இருக்கின்றன. அவற்றுள்ஒன்று, "ஒருவராயிருமூவருமாயவன் குரு" என்றும், மற்றொன்று அக்குரு வதியுமிடமாகிய கடம்பூர்க் கோயிலை யடையும் பயனை விளக்கும்.

---

* நன்றாளு மாயெனக் கெந்தையுமாகி யெனவெடுத்துத்[று
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யேங்கட்கென்
வான்றாழ் புனற்கங்கை வாழ்சாடையானை மற்றெவ்வுயிர்க்
[குஞ்
சான்றா மொருவனைத் தண்டமிழ் மாலைகள் சாற்றினரே
—134

மற்று மினையன வண்டமிழ் மாலைகள் பாடிவைகி
வெற்றி மழவிடை வீரட்டர் பாத மிகநினைவில்
உற்றதொர் காதலி னங்குநின் றேகி யொன்னார் புரங்கள்
செற்றவர் வாழும் திருவதி கைப்பதி சென்றடைவார் —135

தேவர் பிரான்றிரு மாணிக் குழியுந் தினைநகரும் [ப்
மேவினர் சென்று விரும்பிய சொன்மலர் கொண்டிறைஞ்சி
பூவலர் சோலை மணமடி புல்லப் பொருண்மொழியின்
காவலர் செல்வத் திருக்கெடி லத்தைக் கடந்தணைந்தார்
பெரியபுராணம்—136

† திருவதிகைப் பதிமருங்கு திருவெண்ணெய் நல்லூரு
மருளுதிரு வாமத்தூர் திருக்கோவ லூர்முதலா
மருவுதிருப் பதிபிறவும் வணங்கி வளத் தமிழ்பாடிப் [ந்தார்.
பெருகுவிருப் புடன்விடையார் மகிழ்பெண்ணாகட மணை
பெரியபுராணம் 149.

¶ உரித்தவுடை யார்துவரா வுடம்பை மூடி
யுழிதருமவ் வூமரவ ருணரா வண்ணம்
பரித்தவன்காண் பனிவரைமீப் பண்ட மெல்லாம்
பரித்துடனே கிரைத்துவரு பாய்நீர்ப் பெண்ணை
நிரம்துவரு மிருகரையும் தடவா வோடி
நின்மலனை வலங்கொண்டு நீள நோக்கித்
திரிந்துலவு திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தையானே.
திருமுண்டீச்சரம்-திருத்தாண்டகம் 8.

இதனைத் திருக்கண்டீச்சரம் என வழங்குவர் சாமிநாத பண்டிதர்.

* ஆங்கணி சொன்மலர் மாலை சாத்தியப்
பாங்குபர் தணைநல்லூர் பணிந்து பாடிப்போய்த்
தீங்குதீர் மாமறைச் செம்மை யந்தணர்
ஓங்குமோ மாம்புலி யூர்வந் துற்றனர்.
—சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம் 250.

† திருவோமமாம் புலியூருக்குச் சற்று அருகிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் வைதீச்வரன்கோயில் சற்று வடமேற்காய் இந்த ஸ்டேஷனுக்கு 8 மைலிலிருக்கிறது. அதனின்று வடமேற்கே நாலுமைல் திருக்கடம்பூர்.

‡ ஆதியா னரியயனென் றறிய வொண்ணா
யமரர் தொழு கழலானை யமலன் தன்னைச்
சோதிமதி கலைதொலையத் தக்கன் எச்சன்
சுடரிரவி யயிலெயிறு தொலைவித் தானை
ஓதிமிக வந்தணர்க ளெரிமூன் றோம்பு
முயர்புகழார் தருமோமாம் புலியூர் மன்னும்
நீதில்திரு வடதளி யெஞ் செல்வன் றன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே.
திருவோமாம்புலியூர்—திருத்தாண்டகம் 2.



*இப்பதியில் திருஞானசம்பந்தர் எழுதிய பதிகம் ஒன்று திருமுறைகளிற் காணலாம். அது பெரும்பாலும்வெளிப்பாட்டென்றுஅனுமானிக்கலாம். 9,10, 11-ம் பாசுரங்கள் சம்பந்தர் நடையாய்க் காணப்படினும், ஒவ்வொரு அடியின் இடையிலும் முடிவிலும் வாக்கியநிலை சொற்றொடர்நிலை ஓரேமாதிரியாய் ஏற்படுவதாலும், அதற்குத் தக்க காரணம் காணப்படாமையாலும், சம்பந்தர் சொல்நயம் வெளியாகாமையாலும்,இப்பதிகம் சம்பந்தருடையதெனக் கூறலாகாது.

* வெலவ வான்புல னைந்தொடு வேதமும்
சொலவ வான்சுழ லுந்தடு மாற்றமும்
அலவ வான்மனை யார்த்தமென் றேளியைக்
கலவ வான்கடம் பூர்கரக் கோயிலே"
—திருக்கடம்பூர், திருக்குறுந்தொகை 2

†எட்டாம் பாசுரம் இராவணனைப்பற்றி யொன்றும் கூறவில்லை.

"பூம்படுகிற் கயல்பாயப் புள்ளிரியப் புறங்காட்டில்
காம்படுதோ ளியர் நாளும் கண்வளருங் கடம்பூரில்
மேம்படுதேவியொர்பாக மேவியெம் மானெனவாழ்த்தித்
தேம்படு மாமலர் தூவித்திசை தொழத்தீய கெடுமே"

இதன்றியும் 9-வது பாசுரம் இராவணன், மாரயன் விருத்தாந்தங்கள் ஒன்றின்பின் ஒன்றைவைத்து முறை பிறழ்ந்தும் காணப்படுகின்றது. 3-வது பாசுரம் நம்மை மயக்கவும் வைக்கிறது. இக்காரணங்களால் இப்பதிகம் வெற்றிப்பாட்டென எண்ணல்வேண்டும்.

---

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

### 12. கார்முகப் படலம்

கோடுத்தபின் கோள்ளேனற் கோடையினுக் கேல்லே.

மிதிலாபுரி அரண்மனையின்கண் வைகிய தையலார் தங் கோமகள்திறத்து வைத்த நேயத்தின் மிகுதியை நினைக்குங்கால் இனி அவர் உரைக்கப்புகுஞ் சில சொற்கள் வியப்பன்றி நகைப்பே விளைக்கும். கார்முகச் சாலையிலிருந்து கொணரும்போது வீதியிலவ் வில்லினைச் சூழ்ந்துவந்தவர் ஆடவர்களா யிருத்தல் வேண்டும். பெண்டிராயின் மொய்த்ததனைத் தொடர்ந்திரார். அவ்வாடவர் ஒன்றுகூடி ஒருவருக் கொருவர் கரியாக உரைவளர்க்கச் சனகனது புகழெல்லாம் பொதுஜனப் பகுவாயில் அரைபட்டுதிர்ந்ததை முன்னர்க் கண்டோம். கவிஞர்பெருமான் கம்பர்பிரான் காட்டியவண்ணந்தனில் " மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்பது ஒன்றே" யாதலால், இவ்வவையிலுள்ள அரிவையர் ஒழுக்கமும் உரையும் அவ்வாறேயாயின. இவர்களும் தம் அரசனை இகழ்ந்தனர், பழித்தனர்; வில்லினைவைதனர். கோசிகன்பால், நான்முகன்பால் குறைகண்டனர். முன் பேசிய புருடர்களிலும் இவர் சீதைக்கு நெருங்கினவர்களாதலால் அவனையுஞ் சிறிது கடிந்தனர். நெடுஞ் சிலையை நோக்கி யெழுந்த இராமன் நடந்ததனை யெய்துவதன்முன் இந்நல்லாரோ இங்கு,

வள்ளன் மணத்தை விழைந்தன னென்றாற்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ள மணைத்தவன் வில்லை யெடுத்திப்
பிள்ளைமு னிட்டது பேதைமை யென்பார்.

[வள்ளலாகிய இவ்விராமன் தானாக வந்து சீதையை மணக்க விரும்பினான் என்றபின், 'ஏற்றுக்கொள்' என்று சொல்கின்ற அளவும் காலந்தாழாமல் சீதையை முதலில் கொடுத்துவிட்டுப் பிறகு 'பெற்றுக்கொள்' என்று சொல்வதை விட்டு, வேகத்தின் ஆற்றல் மிகுந்த கங்கையைத் தன் சடையில் தரித்த சிவபிரான் கையாண்ட இவ்வில்லையெடுத்து இச்சிறு பிள்ளைமுன், 'நேனேற்று' என்று வைப்பது மதியீனம் ஆகும், என்பார்]

ஈகையின் இலக்கணத்தை இம்மாதர் வேறுபிறர் வகுத்துள வகைக்கெலாம் விஞ்சச் சாற்றுவது இங்கு இப்பாசுரம் ஓதுவோர் கருத்தைப் பிணித்துவக்கின்றது. அறிவின் ஒளிவிளங்கும் புறநானூற்றுப் பாடல்களின் நடுமணி யெனத்தக்க செய்யுளொன்று இச்செவ்வியிற் சிந்தித்தற்பாலதாம். கடையெழு வள்ளல்களுள் ஒருவனாய வல்விலோரியினிடத்து வந்தடைந்த கழைதின்யானையார், அவன் பரிசில் நீட்டித்தலைக்கண்டு வண்மையின் தன்மையை அறிவுறத் தக்கருதி,

ஈயென விரத்த லிழிந்தன் றதனெதி
ரீயே னென்ற லதனினு மிழிந்தன்று
கோள்ளேனக் கோடுத்த லுயர்ந்தன் றதனெதிர்
கொள்ளே னென்ற லதனினு முயர்ந்தன்று

[கொடு என்று கேட்டு இரப்பது மிகவும் இழிவானது. அப்படிக் கேட்டகாலையில் கொடேன் என்று மறுப்பது அதனிலும் இழிவானது. கேளாமுன்னம் அடைந்தவன் முகக்குறி யுணர்ந்து, 'இதனைக் கொள்க' என்று தானே கொடுத்தல் மிகவும் உயர்ந்தது. அப்படிக் கொடுக்குங்காலையிலும் "எனக்கு வேண்டா" என ஏற்காதிருப்பது அதனினும் உயர்ந்தது]

என்றுசாற்றுவாராயினர். இதன்கணுள்ள ஒவ்வொரு சொல்லும் நேரிதே."கொள்ளெனக்கொடுத்தல்" உயர்ந்ததென்பார் கழைதின்யானையார். இச்செய்யுளோடு நின்றுவிடுவோமாயின் கொடைவகையில் இதன்மேல் உயர்ந்தவொன்று உளதோ என்னும் எண்ணமும் நம்மனோர்பால் நிகழ்தலருமை. "இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல், குலனுடையான் கண்ணே உள" என விளம்பிய திருக்குறளதிகாரத்தின் பொருளைப் பெரும்பான்மை அக்கவியின் வாசகம் தழுவியுளது. கொள்ளெனக் கொடுத்தலினு முயர்ந்தவொன்றுளதென்பதைக் கம்பரிடத்தே கற்கலாம். கொள்ளெனக் கொடுத்தலினும், 'கொள்' என்றுரைத்துப் பின் எடுத்துத் தருகின்ற நேரங்கூட இடையீடின்றிக் கொள் என உரைப்பதன்முன்பு கொடுத்துவிடல் சிறந்ததெனச் செப்புகின்றார் கம்பர். 'கொள் எனக் கொடுத்தல்' உயர்ந்ததென்பார் அப்புலவர். இவர் கொடுத்தபின் 'கொள்' எனல் சிறந்ததென்பவர். வல்விலோரிக்கு ஓதப்புகுந்த கழைதின்யானையார்க்கே இன்னபடிகொடைத்திறங் கற்பிக்க வல்லவராதலாற்றான் கம்

பர் கவிச்சக்ரவர்த்தி யாயினர். எனினும் இவ்விருவரையும் ஒப்புநோக்குங்கால் ஒன்று உணர்தல் வேண்டும். கழைதின்யானையார் தன் கருமங்கருதி வல்விலோரியை அடைந்தவர். தனக்கு அவன் பரிசில் நல்காது நீட்டித்தலால், அதன் இகழ்ச்சியைக்காட்டித் தனக்கு அவன் கொடுக்கும்படி முயற்சி கொள்ளுமாறு செப்பிய சொற்களவை. இங்கு இம்மிதிலை மாதரசிகள் தாமொன்று பெறுதலை நிமித்தமாக வைத்துப் பேசியவரல்லர். ஜனகன் சீதையை இராமனுக்குக் கொடுப்பதனையே இங்குக் குறிக்கொண்டுளர். சுயநலங் கருதாது அயலார் நன்மையை நுனிக்கும் மனத்தின் கண்ணே அறத்தின் திறம் பின்னுமொருபடி சிறக்கத் தோன்றும். ஆதலின் கொள்ளென முன்பு கொடுத்தலை இவர் பாராட்டினர்.

பொதுவற இவ்வகையி லம்மாதர் ஈகையறைத்தை இசைத்தாரேனும் மற்றபடி மானுட இயற்கைக்குரிய பொதுமையையே பற்றி நிகழ்ந்தனர். "என்னிது கொணர்கென இயம்பினன்" என்று முன்னொருவன் அயிர்த்தானென்றால் அவனைத் தொடர்ந்து மற்றொருவன், "மன்னவருளர்கொலோ மதிகெட்டார்" என்று முடித்ததைக் கண்டவர், "வள்ளல் மணத்தை விழைந்தனன் என்றால், கொள்ளென முன்பு கொடுப்பதே முறை" என்று ஒருத்திகூற மற்றவள், மன்னனைப் பேதையாக்கி முடிப்பதையும் ஒக்கக் காண்பார். மற்றுஞ்சிலமாதர் இங்கு,

ஞான முனிக்கொரு நாணிலை யென்பார்
கோனிவ னிற்கொடி யாரிலை யென்பார்
மானவ னிச்சிலை கால்வளை யானேல்
பீன தனத்தவள் பேறில ளென்பார்.

[இவ்வில்லைப் படைத்த பிரம்மனுக்கு வெட்கம் சிறிதுமில்லை என்பார். அரசன் இவனைக்காட்டிலும் கொடியவர் வேறு இலர் என்பார். இப்பெருமகன் வில்லை வளைக்கானுயின் சீதை முலைகளே பெருத்தவ ளல்லாமல், நல்லதிர்ஷ்டம் பெருத்தவ ளல்லள், என்பார்.]

பலபொருள் படுமொரு முதலடி பெற்று நிற்கின்றது இச்செய்யுள். ஞானன் என்பது நான்முகனுக்கு ஒரு பெயராதலால், "இப்படி ஓர் இடையூறு இதனால் நேருமென வோராது இவ்வில்லைச் செய்த பிரமன் நாணமற்றவன்" என்று அவனை இகழ்ந்தது பொருந்தும். இது, "விதிசெய்த தீமைதான்" என்று முன் புருடர்கள் உரைத்ததோடிணங்கலாகின்றது. இனி, முனி என்பதற்கு 'வில்' என்ற பொருளை வைத்து, எல்லா வில்லிற்கும் நாணே ஏற்றியிருக்கப் பிரம்மன்செய்த இவ்வில்மாத்திரம் நாண் (கயிறு) ஏற்றியில்லாமற் கிடக்கின்றதே. இருக்குமாயின் இப்பொழுதித் துன்பம் நேராதன்றே!" என மாதர் வில்லினை வைததாகவுங் கொள்ளலாம். இது 'கைதவம் தனுவெனல்' என்று முன் மைந்தர் உரைத்ததை ஒருவாறு ஒக்கும். இவையன்றி, "ஞானமுனி, என்று பெயர் வைத்துக்கொண்டு, சிறுபிள்ளையிவன் இச்செயல் செய்யவேண்டுமென்று செப்பிய சதானந்தனுக்கேனும், அதற்குச் சம்மதித்த கோசிகனுக்கேனும், எள்ளளவும் வெட்கம் இல்லை" என இகழ்ந்தனர், என்னும் பொருளும் ஏற்றதே. வில்லினை மார்தர் மொய்த்தவர்தபோது இம்முனிவர்களும் இச்செயலில் கலந்திருப்பதை அறிந்தவராதல் இயலாதாதலின் கோசிகனும் சதானந்தனும் அவர் வாய்க்கு இலக்காகாமற் பிழைத்தனர்.

முன் "என்னிது கொணர்கென விளம்பினன்' என்று ஒருவனெய்திய ஐயத்தினுள் மன்னனைப்பழிக்கும் உட்கருத்து அடங்கியிருக்கின்றதென மற்றொருவன் மதித்துத் தனதெண்ணம் அதனால் உரம்பெற்றவனாகி வேந்தனை மதிகெட்டானென இகழ்ந்து விளம்பவும், அதனை இன்னொருவன் உட்கொண்டு, இச்சிலை உதைத்தகோலைச் சனகனை, நச்சிலாத் தன்நங்கைமேல் நாட்டுதற்கொத்த கொடியவனேயாக்கிவிட்ட முறைப்படியே மாதர்களும் "கோனிவனிற் கொடியாரில்லை" எனக் கூசாது மொழியவும் ஆயினர். முன் ஒருத்தி "வள்ளல் மணத்தை மகிழ்ந்தனனென்றால்" எனத் துவக்கியதைமட்டும் மற்றொருத்தி கேட்டனள். முழுதுங் கேட்டிருப்பளாயின் கொடையின் முறையே கூறப்படுகின்றதென்பதை உணர்ந்து, வள்ளல் என்பது இராமனைக் குறிப்பதையும் தெரிந்துகொண்டிருப்பாள். 'வள்ளல் மணத்தை மகிழ்ந்தனனென்றால்' என்பதைக்கேட்டாள்; பிறருரையிடையே பின்வரு மொழிகளிற் சில அமிழ்ந்துபோய்க் கடையில் 'இட்டது பேதைமை' என்று வேறொருத்தி முடித்ததையும் கேட்டனள்போலும். வள்ளல் என்னுமச்சொல் ஜனகனைக் குறிப்பதாகக் கொண்டனள். "இந்தச் சனகன் மாத்திரம், சீதைக்கு மணம் முடியவேண்டும் எனும் விருப்பம் சிறிதேனும் உடையவனாயின்......" என்று ஏதோ கூறப்பெறுவதாக எண்ணினள். இதற்குள் அவனைப் பேதையெனவொருத்தி இகழ்வது இவள் செவியில் விழுந்தது. ஒருத்தி அயிர்த்ததும் அயலவள் இகழ்ந்ததும் இவள் நெஞ்சினுள் துள்ளிய கள்ளத்தைத் தூண்டிவிட்டன. இலதேல் நினைக்கவொண்ணா இந்நினைவு பிறந்தவுடன் அவள் மனத்தில் அழிந்திருக்கும். அவ்வாறு அழியாமல், "மதியிலியல்லன் நம் மன்னன். ஜனகனே கொடியன். தன் மனைவி உதரத்தில் உதித்திலளாதலால் இச்சீதையின்பால் உள்ளன்பு இலனாகி அவளுக்கு மன்றலென்பது ஒருநாளும் முற்றுறாதவாறு சூழ்வதற்கே இம்மாய வில்லினைக் கிடத்திவிட்டான்" என்று எடுத்தியம்பத் துணிந்தவ ளாயினள்.

இன்னபடி எவ்வகையிலும் அங்கு நம் சகோதரர்கள் கூடிக் கூறியவாங்கே இங்கு நம் சகோதரிமார்களும் கூடிக் கூறியிருக்கின்றனர். மற்று, இச்சகோதரிகள் கூடிக் கூறியதையே அங்கு நம் சகோதரர் குழுவினும் கேட்டோம். எனின், வம்புரையாடலென்பது பெண்மக்களுக்கே உரியதொன்றன்று. ஆண்வம்பென்றும் பெண்வம்பென்றும் ஒரு பேதமில்லை. மார்தர் குழுமியக்கால் கூட்டுணும் விருந்தாகிய இவ்வம்பு பால்பகா உயர்திணை.

மற்று,இன்னவாறு தன் தன்மைக்குப் பொருந்தாச் சொற்களால் பழிப்புண்டவன் மன்னர்களுள் சனகன் ஒருவனேயல்லன். அவ்வாறு பழிப்பதும் மிதிலைமண்ணிற்கே சிறப்பாய வழக்கும் அன்று. பற்றுற்று ஒருபக்கம் உளம்சாயும் போதெல்லாம், இடத்திலெல்லாம் மறுபக்கம் பழிசிதறப் பேசுவதே மார்தர் தொழில். பிற்றைநாள் முடிசூட நின்ற இராமன் வனமேவிச் செல்லல்நோக்கி ஆற்றாத அயோத்திமக்களும், "ஆ ஆ அரசன் அருள் இலனேயாம்" என்றும், "இறைமகன் திருமனம் இரும்புதான்" என்றும் தயரதனைத் தகைந்துரைப்பவராயினர்.

மிதிலாநகரத்து ஆண்மக்களால் சொல்லத்தகாததும் சொல்வதற்கு இயலாததுமான வொன்றைமட்டுமே



மன்னவையிருந்த மாதரார் அதிகமாகச் சொல்வது இயற்கையாயிற்று. பெண்ணிற்கு வயதோ வளர்வதாகியும் தக்க வரன் கிடைக்காமல் தளர்கின்ற அன்னையும், உற்றவராய் மற்றுமுள மாதர்களும் அப்பெண்ணைக் குறித்து, "இக்கன்னியோ பருவம் முதிர்ந்து நிற்கின்றனள். அப்பருவத்திற்குரித்தாய கணவனைப் பெற்றாளல்லள். இவள் விதி இழிந்தவாறு என்னே!" எனப் பரிவினால் அவளைச் சிறிது வைதிடலாகின்றது. கோமகள் சீதையும் இத்தகைய சொல்லிற்குக் குறியாயினாள். "பீன தனத்தவளேயன்றிப் பேறே பெரிதிலள்" என்னுந் தனது உறவினரால் அன்றவளோர் இளவசை யுற்றனள்.

189054

# வறுமைப் பிணி

நாமகளும் பூமகளும் ஒன்றி வாழ்தல் அருமையாமென்பது தொன்றுதொட்டு கண்ட உண்மை. ஆய்ந்தமைந்த கேள்வி யறிவுடையோர் தம்மகத்தே திருவளர் பொலிவும், செழும்பொருள் குவித்தோர் தம்பால் கலைபயில் தெளிவுங் காண்டல் மிகமிக அருமை. கலைவலாளரை மலர்மகள் தணத்தற்கும், பொருள் வலாளரைக் கலைமகள் வெறுத்தற்கும் ஏது ஏதோ? மண்ணுலகின் மாதருள்ளே மாமி மருகியரின் வாழ்க்கைமுறை, அவ்விண்ணுலகப் பெண்ணினல்லாரையும் பீடித்து நின்றுளது போலும்! அதனால் மண்ணுலக மாந்தர் பலர் உறுகின்றவின்னல் கூறத் தரமன்று. கலைமகள் உறவை விடுத்து மலர்மகள் அருளைப் பெற்றுள ஒருவர் நிலையினும், மற்றவர் நிலைமை பெரிதும் இரங்குதற் கொத்ததே.

நாருத் தகடேபோல் நன்மலர்மேல் பொற்பாவாய்
நீரும் நிலத்து விளியரோ—வேறுய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கம் துறந்து

என ஒருவர் மலர்மகளைச் சபித்திருத்தலும் ஈண்டு நோக்கத் தக்கது. எனவே வறுமைப் பிணியினுங் கொடியது பிறிதொன் றில்லையென்பதற்குப் பலப்பல கூறுதல் வேண்டா.

"இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது"

என்ற வள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழியொன்றே போதுமானது. அத்துணைக் கொடிய வறுமைப் பிணிக்கு மருத்துவங் கூறப் புக்கதன்று இக்கட்டுரை; மற்று, அவ்வறுமைப் பிணியின் நிலைமையை ஒருவாறு வருணிக்கப் புகுந்துளது; அப்பெருநாவலரின் திருவாய்மொழியைச் சில எடுத்துக்காட்டுகளான் விளக்க முயன்றுளது.

பண்டைநாட் புலவரோ, அன்றிப் பின்னாள் தோன்றியவரோ யாவரேயாயினும் நல்குரவதனால் நலிவுற்று மெலிந்தோர் மிகப்பல ராவர். எனினும் இவ்விருதிறத்தினருள் வறுமையிற் செம்மையராய், இன்மையின் உண்மையைச் செவ்விதின் இயம்பினோர் அன்றைய அரும் புலவர். அவருள்ளே பெருஞ் சித்திரனாரும், பெருந்தலைச் சாத்தனாருமே இன்மையின் உண்மையைத் திறம்பட வோதியுள்ளார். அன்னார் கவியை ஓர்முறை யோதின் கன்னெஞ்சராயினுங் கண்ணீர் பெருக்குவர். ஈதலிற் சிறந்த மேதகையாளன் வெளிமானுழைப் பரிசில் பெறச்சென்ற பெருஞ்சித்திரனார் அவன் உறையுள் அண்மியகாலை, அந்தோ, அதுபொழுது அவர் நாடிவந்த அப்பெரு வள்ளலே இறந்துபட்டானென அறிந்ததும், அவர் ஏங்கிப் பாடிய பாட்டு இது—

கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா
வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடிப்
பேஎ யாயமொடு பெட்டாங்கு வழங்கும்
காடுமுன் னினனே கட்கா முறுநன்
தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடிப்
பாடுநர் கடும்பும் பையென் றனவே
தோடுகொள் முரசுங் கிழிந்தன கண்ணே
ஆளில் வரைபோல் யானையும் மருப்பிழந் தனவே
வெந்திறற் கூற்றம் பெரும்பே துறப்ப
எந்தை யாகுதல் அதற்படல் அறியேன்
அந்தோ எளியேன் வந்தனென் மன்ற
என்னா குவர்கொல் என்றுன்னி யோரே!
மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதின்
ஆரஞர் உற்ற நெஞ்சமோ டோராங்குக்
கண்ணில் ஊமன் கடற்பட் டாங்கு
வரையளந் தறியாத் திரையரு நீத்தத்
தவல மறுசுழி மறுகலிற்
றவலே நன்றுமற் றகுதியும் அதுவே.

["பிணமிட்டுக் கவிக்கப்பட்ட செய்யதாழியின தகுவிந்த புறத்தேயிருந்த செவி சிவந்த கழுகின் சேவலும், பொகுவலென்னும் புள்ளும் அஞ்சாவாய், வாய்வலிய காக்கையும் கோட்டானும் கூடிப் பேயினத்துடனே விரும்பிய வழியே யியங்கும் சுடுகாட்டைத் தலைப்பட்டான், வீரபானத்தைக் காமுறுவான்; அவனுடைய வளைகழிக்கப்பட்ட உரிமை மகளிரைப்போலப் பழைய அழகு தொலைந்து பாடுவாரது சுற்றமும் ஒளிமழுங்கின; தொகுதிகொண்ட முரசங்களும், பாகர் முதலரியன ஆளில்லாத மலைபோன்ற யானைகளும் பயனிலவா யொழிந்தன; இவ்வாறு வெவ்விய திறலையுடைய கூற்றம் பெரிய இறந்துபாட்டை எய்துவிப்ப என்னிறைவன் அவ்விறந்துபாட்டிலே படுதலை அறியேனாய், ஐயோ! அளித்தலையுடையேன் வந்தேன்; நிச்சயமாக என்னையாமுறுவர் கொல்லோ என்னையடைந்த சுற்றத்தார்! மழையையுடைய இரவின்கண் மரக்கலங் கவிழ்ந்தகாலத்துப் பொறுத்தற்கரிய துன்பமுற்ற நெஞ்சுடனே கண்ணில்லாத ஊமன் கடலின்கண் அழுந்தினாற்போல, எல்லையளந்தறியப்படாத திரையரிதாகிய வெள்ளத்தின்கண் துன்பமாகிய மறுசுழியின்கட்பட்டுச் சுழலுமதனில் இறந்துபடுதலே நன்று; நமக்குத் தக்கசெய்கையும் அதுவே" என்பது இதன் பொருள்]

"இவ்வளவிற் செல்வரோ! இவ்வளவிற் காண்பரோ!
இவ்வளவில் தங்கோள் இயம்புவரோ-இவ்வளவில்
மீள்வரோ! மீண்டெம் மிடிதீர்ப்பரோ!

என்று நாழிக்கொரு வூழியாய்க் கருதிக் கழிக்கும் என் மனைவிமக்களை யெம்முகங்கொண்டு பார்ப்பேன்?" என வருந்தும் இப் புலவர்பெருமானது நிலைமைக்கு இவரே காட்டும் நடுஇரவிற் கடுங்காற்றும் பெருமழையுங் கலந்தலைத்துக் கலங்கவிழ்ப்பக்

கடலுள் மூழ்கி வருந்தும் கண்ணில் ஊமன் நிலைமையைத்தவிர வேறி யாதுவமை நன்கு பொருந்தும்? எனவே, இனித் தற்கொலைதான் அமைவதோ? என அலமருகின்றார் அப்பெரும்புலவர். இடுகாடதனையோர் திருநகரென்று கருதிச்சார்ந்தசார்ங்கலனென்னுமோர் பார்ப்பனச்சிறுவன் ஆங்கோர் பேய்மகள் கால்பெயர்த்தாடியதைக்கண்டு வெருவிக் காலன் வயத்தனாகினும், ஈங்கே புட்கள்திரிதரும்புறங்காட்டியல்பைஇப்பெரும் புலவர் செப்பிய சில மொழிகளே அவற்றைப் பயில்வுறும் நம்மனோர் நெஞ்சைத் துணுக்குறச் செய்யவில்லையா? இங்ஙனம் நொந்து நைந்த புலவர் வெறுங்கையராய் வீடு சேர மனமின்றி வெளிமானின் தம்பி இளவெளிமானிடத்தே பொருள் பெற்றுச் செல்வோமெனக் கருதி யிரந்தார்க்கு, அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது பாடிய பாட்டு, பின்வருவது:—

நீடுவாழ் கென்றியான் நெடுங்கடை குறுகிப்
பாடி நின்ற பசிநாட் கண்ணே
கோடைக் காலத்துக் கொழுநிழ லாகிப்
பொய்த்தல் அறியா வுரவோன் செவிமுதல்
வித்திய பனுவல் விளைந்தன் று நன்றென
நச்சி யிருந்த நசைபழு தாக
அட்ட குழிசி யழற்பயந் தாஅங்
களியர் தாமே யார்க வென்ன
அறனில் கூற்றந் திறனின்று துணிய
ஊழின் உருப்ப எருக்கிய மகளிர்
வாழைப் பூவின் வளைமுறி சிதற
முதுவா யொக்கல் பரிசில ரிரங்கக்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்வேல் விடலை சென்று மாய்ந்தனனே
ஆங்கது நோயின் றாக ஓங்குவரைப்
புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலிபார்த் தொற்று தாகும் மலிதிரைக்
கடன்மண்டு புனலின் இழுமெனச் சென்று
நனியுடைப் பரிசிற் றருகம்
எழுமதி நெஞ்சே! துணிபுமுந் துறுத்தே.

[(இதன்பொருள்) நெடுங்காலம் வாழ்வாயாகவென்று யான் நெடிய வாயிலையணுகிப் பாடிநின்ற பசியையுடைய காலத்திலே, கோடைக்காலத்து வெம்மையான் நலிவார்க்குக் கொழுவிய நிழல்போன்று, மெய் திறம்பாச் செம்மையோனாகிய வெளிமான் செவியிடத்தே நல்லோர்விதைத்த கேள்வியாகிய பயிர் நன்குவிளைந்ததெனக் கருதிப் பரிசிலை விரும்பியிருந்த அவ்விருப்பம் பயனின்றிப் போமாறு, அடப்பட்ட பானையினின்றும் சோற்றை யெதிர்பார்த்திருக்க, அந்தோ! அதற்குமாறாக அதனுள்ளிருந்து எரிபுறப்பட்டாற்போல, அளிக்கத்தக்க நம்போன்றார் உண்பாராகவென்று கருதாத அறமில்லாத கூற்றம் கூறுபாடின்றி அவன் உயிரைக்கொள்ளத் துணிய; முறையான் வெய்தாக மார்பின்கண் அறைந்துகொண்ட மகளிர் கையிலணிந்த வளைகளின் முறிகள் வாழைப் பூப்போலச் சிதற, சுற்றத்தோடுகூடிய பரிசிலர் இரங்கப் பாழ்பட்டபுறங்காட்டின் கண்ணே வேலையுடைய நம் வீரன்போய்இறந்துபட்டான்; எனினும் கூற்றம் நோயின்றி வாழ்வதாக; உயர்ந்த மலையிடத்துப் புலி பார்த்துவீழ்த்த களிறாகிய இரை தப்பின், அதற்கீடாக எலியைவீழ்த்தி இரையாக்கிக் கொள்ளல் இயல்பன்றே? ஆதலின், நெஞ்சே! எழுந்திரு! வேறிடம் போந்து மிக்க பரிசிலைக் கொடுவருவேமாக" ]

"இலவு காத்த கிளி" போலாய இவர் நிலைமைக்குக் கொடும்பசியால் கடுந்துயருற்றொருவன் அடப்படும் பானையில் சோறும் நீரும் கொதித்து எழுதலைப் பார்த்தற்கு மாறாக, நெருப்புப்பொறி தெறித்து விழக் காண்டலை உவமையாகக் கூறியது முற்றும் அமையும். இனி வெளிமா னிறந்துபட்டானாக, அப்பெருந்துயர் பொறுக்கலாற்றா அவனுரிமை மகளிர் தம் கையால் மார்பறையாநிற்ப, அதுபோது அவர்கள் கையினின்று உடைந்து விழும் வளையல்களுக்கு வாழைப் பூவின் மடலினின்று உதிராநிற்கும் சிறு பூக்களை உவமை யாக்கியிருக்கும் அப்புலவர் பெருமகனாரின் இயற்கையழகுத் திறனை யென்னென்று புகழ்வது? இங்ஙனம் நல்குரவால் வருந்தும் அப்புலவரின் வறுமைப் பிணிக்கு மருத்துவனாய்த் திகழ்ந்த வெளிமானைக் கொடுங்கூற்றம் கொடுபோய பின்றையும் "கூற்றமே! நீ நோயின்றி வாழ்வையாக" என மொழிந்தது, கூற்றின் சிறுமையைப் புலப்படுத்துவதாயினும் "எம் போன்றார் இவ்வண்ணம் நலியத் தீவினை புரிந்த திறத்தால் அக்கூற்றம் பின்னர் எந்நிலையுறுமோ?" என இரங்கிப் பசிப்பிணிக்கு மருத்துவனாய அவன் மறப்பிணிக்கும் மருத்துவன் ஆவன், "ஆதலின், கூற்றமே! நீநோயின்றி வாழ்வையாக" எனுமொரு பொருளும் தந்து நிற்றலின் அப்புலவரின் செம்மையையும் புலப்படுத்தும். ஒருவன் குமிழிட்டுச் சுழித்தோடும் ஓர் பெருவெள்ளத்தே சிக்கிக் கரைசேர வலியின்றிக் கைசோர்ந்து மெய்சோர்ந்து கண் கலங்கி, யாக்கை யகத்ததோ புறத்ததோ ஆவி யெனத் தடுமாறும் அவ்வேளை குற்றியொன்று அந்நீத்தத்தே தோன்றல் கண்டு, புத்துயிரும் பெருவலியும் பெற்று அதனைப் பற்றமுயல, அந்தோ! அது குப்பையுஞ் செத்தையுமாயின் அவ்வேழையின் மனநிலை யென்னும்! அதனினும் இரங்கத் தக்கதாக முடிந்தது நம் புலவர்திலகரின் மனநிலை. (தொடரும்)

# வில்லி பாரத விளக்கம்

## ஆதிபருவம்

### அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்.

தென்னிந்திய நிலைமை (ஆராய்ச்சி)

352 பக்கத் தொடர்ச்சி.

வடமொழிப் பாரதத்தில் அருச்சுனன், தன் னண்ணன் மனைவியுடனுறையும் இல்லத்திற்குள் செல்ல அஞ்சினனென்றும், பின் தன்னை நாடிவந்த அந்தணன் துன்பமுறுதலைவிடத் தானே அத்துன்பத்திற்குள்ளாய், அடைக்கலம் புகுந்தவனைக் காத்தலே சிறந்ததென்று தேறித் தன்னுத்தரீயத்தால் முகத்தை மறைத்து உட்சென்றானென்றும் கூறப்பட்டிருக்கின்றது. தான் யாத்திரை செல்லவேண்டுமென்று தருமருடன் சொல்லி விடைகேட்கும்போதும் அவர் ஒன்றும் சொல்லத்தோன்றாராய்த் தழுதழுத்த நாவுடன் என்னவென்று கேட்டப்பின்னால், சிறியவன் உள்ள விடத்திற்குப் பெரியோன் வரின் அதுவே குற்றமாகு மென்றும், முன்னோனுள்ள விடத்திற்குப் பின்னோன் போதல் குற்றமாகா தென்றும், முனிவன் மொழிந்ததற்கு அதுதான் பொருளென்றும், சொல்லிப் பின்னும் தான் அவனை யாத்திரை போகாமல் இருக்கும்படியே கட்டளை யிடுவதாயும் சொன்னார்.



இவர் ஆணைக் குடன்பட்டால், தாங்கள் செய்து கொண்ட சங்கேதத்திற்குப் பழுதுண்டாகும் என்று எண்ணிய அருச்சுனன், அதற்குடன்படானாய் வெளிக் கிளம்பிவிட்டான். அவன் முதன்முதலாகக் கங்கோத்திரியை யடைந்தான். அதாவது, ஹரித்துவாரத்துக்கும் வடக்கேயுள்ள இமயமலைப்பிரதேசம் என்று நாம் கொள்ளவேண்டும்.

அவ்விடத்தில் உலூபியைக் கண்டு காமுற்று அவளால் நாகலோகத்திற்கு அவன் இழுக்கப்பட்டானாம். இதை வில்லி மாற்றி அவளும் அவள் சேடியருட் புனலாட அவ்விடமுற்றாரெனவும், அக்காலை அருச்சுனன் அவளைக்கண்டு பிலவழியே யவள்பின் சென்றானெனவும் ஒழுங்காகக் கூறியுள்ளார். பின்னர்க் கிழக்கு நோக்கி அகஸ்தியவடம், வஸிஷ்டபர்வதம், பிருதுங்கம், ஹிரண்யபிந்து தீர்த்தம், நைமிசாரண்யம், கோசிகநதிதீரம், கயா க்ஷேத்திரம், கங்கை முதலிய இடங்களை அடைந்தான். நாம் முன் குறித்தபடி இந்தப் பிரதேசம் ஆரியருக்கு நன்றாய்த்தெரிந்த நாடானபடியால் வடமொழிப்பாரதத்தை யியற்றியவரும் படிப்படியாய் மேற்கிலிருந்து ஆரம்பித்துக் கிழக்கு வரையில் உள்ள நாடுகளைச் சரிவரப் புகன்றார். இதற்கப்புறம் அருச்சுனன் அங்க வங்க கலிங்க தேசங்களை யடைந்தானாம். அங்கதேசம் கீழ்ப் பங்காளநாடு, வங்கதேசம் ஜெஸ்ஸோர் கிருஷ்ணகர் முதலிய நாடுகளடங்கிய தேசம். கலிங்கநாடென்பது, கீழ்க்கரையோரமாய்ச் சென்னைக்கு வடக்கே கட்டாக் என்கிற ஊர்வரையிலுள்ள தேசம் இந்தக் கலிங்கநாடு வந்தவுடன் அருச்சுனனோடு வந்த பிராம்மணர்கள் அவனை வழிவிட்டுத்திரும்பித் தங்களூர்போய்ச்சேர்ந்தனராம். ஆகவே அக்காலத்தில் வங்கதேசம்வரையில் ஆரியருக்கு நேராகத்தெரிந்திருந்து, அவர்களுருக்கு எல்லையாகவும் இருந்திருக்கவேண்டும். கலிங்கதேசத்திலிருந்து புறப்பட்டவன், கடற்கரையோரமாய்ச் சென்று கோதாவரி நதிக்கரையை யடைந்தானாம் அதற்கப்புறம், 'ஸமுத்திரஸ் ஸங்கமத்தில் பிரசித்திபெற்ற காவேரியையடைந்து, ஸமுத்திரக் கரையாலேயே மணலூருக்குப் போனான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் அக்காலத்தில் புகார் மிகவும் புகழ்படைத்திருந்ததென்று தெரிகிறது. மணலூரென்பது இன்னதென நமக்கு விளங்கவில்லை. ஆனால் மணலூருக்கு அரசன் சித்திராங்கதன் என்றும் அவன் பெண் சித்திராங்கை யென்றும் கூறியிருத்தலின், மணலூரே மதுரையா யிருந்திருக்கலாம். அன்றி மதுரைக்கு அக்காலத்தில் வேறு ஒரு துறைமுகப் பட்டணமும் இருந்திருக்கலாம். அன்றேல், புகாரே மணலூராயும் சொல்லப்பட்டு மிருக்கலாம். பாண்டியவரசன் ஒருவன் இருந்தானென்று வடநாட்டார் அறிந்திருந்தார்கள். திரௌபதி சுயம்வரத்திலும்,

'கலிங்க வங்காதிப பாண்ட்ய பௌண்ட்ரா விதேஹ
[ராஜோ யவனாதிபச'

என்னு மிடத்திலும் பாண்டியனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. பாண்டியவரசன் இருமுறைத் தன்தூதுவரை உரோமானிய தேசத்திற்கும் அனுப்பியிருந்தானாதலாலும், யவனர் என்பவர் கிரேக்கர்களென்றபடியாலும், உரோமானியரும்கிரேக்கரும் நமதூருக்கு வந்தது பிற்காலமானபடியாலும், இவைகள்யாவும் பின்னால் எழுதப்பட்ட இடைச்செருக லென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இதனைப் பின்னால் ஆராய்வோம்.

மணலூரைவிட்ட அருச்சுனன் தென்சமுத்திரக் கரைக்குச் சென்று, முதலையாயிருந்த ஐந்து கன்னியரின் சாபத்தைப்போக்கி மீண்டும் மணலூர்வந்தடைந்தானாம். தென்சமுத்திரக் கரையென்பது எது? நமது வில்லி சேதுவென்றும் கன்யாகுமரிஎன்றும் சொல்லிவிட்டார். ஆனால் அக்காலத்தில் அவைகளின் பெயர்களை வடநாட்டார் அறிந்திருந்தாரோ என்னவோ தெரியவில்லை. பிறகு 'தூரத்திலுள்ள கடற்கரையின் இடத்தைச் சேர்ந்து கேரளத்தை யடைந்தான். அங்கிருந்து கோகன்னம் முதலிய இடங்களை நோக்கிச் சென்றானென்று சொல்லப்பட்டிருக்கிறது. வில்லியும் "சேரன் பதிகளியாவுங்கண்டு மனங்களிகூரச் சென்று மேலைக்கடல் கண்டா னரகதலங் கண்டுமீண்டான்" என்றும்

திங்களுடனரவுறவு செய்யும் வேணிக் கொந்தவிழு
மலரிதழித் தொடையோன் வைகுங் கொடிமதில் சூழ்
[கோகன்னம் குறுகினானே

என்றும் சொல்வதோடு ஒத்திருக்கிறது.

பாரதக்கதை இராமாயணக் கதைக்கும் முந்தியதென்று சொன்னோம். பாரதக்கதை நடந்தது சுமார் 3000 வருடங்களுக்கு முன் என்றும் அதை முதன் முதலில் புத்தகரூபமாய் எழுதிவைத்தது சுமார் 2400 வருடங்களுக்கு முன் என்றும், சரித்திரக்காரர்கள் ஆராய்ந்தறிந் திருக்கிறார்கள்.

அவர்கள் சொல்வதன்படி பாரதம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் புத்தகரூபமாய் எழுதப்பட்டதென்றும் பிறகு மூன்றாம் நூற்றாண்டில் அது 20000 ச்லோகங்கள் கொண்டிருந்ததென்றும், அதன் பிறகு கி.மு. முதல்நூற்றாண்டில் அது ஒரு லக்ஷம் சுலோகங்களுடையதாய் மாறிவிட்டதென்றும் சொல்லுகிறார்கள்.

இராமாயணக்கதை பாரதக்கதையைவிடப் பிற்பட்டதானாலும் அது முதன்முதலில் கி. மு. 6-வது நூற்றாண்டிலேயே, அதாவது சுமார் 2500 வருடங்களுக்கு முற்பட்டே, புத்தகரூபமாக எழுதப்பட்டுவிட்டது. ஆகையால் இராமாயணநூல் பாரதநூலைவிட நூறு வருடங்கள்முந்தியது. இந்த நூலிலேயும் பலஇடைச்செருகல்கள் உண்டாய், இறுதியில் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில்தான், அதாவது சுமார் 2200 வருடங்கட்குமுன்தான், இப்போது நமக்குக்கிடைத்திருக்கும் வால்மீக இராமாயணம் எழுதப்பட்டதென்று எண்ணுகிறார்கள். ஜாக்கோபி என்னும் பண்டிதரும், மாக்டோனல்ட் என்னும் பண்டிதரும் முதல் இராமாயணம் மிகவும் சிறிய புத்தகமா யிருந்ததென்று தெரிவிக்கிறார்கள்.

முதல் இராமாயணத்தில், யவனர், பஹ்லவர், முதலியவர்களைப்பற்றி ஒன்றுமில்லையாம். யவன நாகரிகத்தால் பின்னால் உண்டான சில விஷயங்கள் அதில் சொல்லப்படவில்லை. பாடலீபுத்திரமென்று பெயர்போன பாட்னாவைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. இராமர் அதன்வழியாகவே யாத்திரைசென்றபோதிலும் அதைப்பற்றி யொன்றுஞ்சொல்லப்படாத

தால், அச்சமயம் அது அவ்வளவு உயர்ந்தநிலைமைக்கு வந்திருக்கமுடியாது.

அக்காலத்தில் நாடுகளெல்லாம் சிறுசிறு தேசங்களாகச் சொல்லப்பட் டிருக்கிறது. குசலவர் இராமாயணத்தைப் பாடினர்களென்பதுகூட இடைச்செருகலென்றும், குசலவ என்பது (Bard) வந்தியென்றும் எண்ணப்படுகிறது. இப்போது ஏழு பாகங்களடங்கிய வால்மீக இராமாயணம் அப்போது ஐந்தே பாகங்கள்தான் கொண்டிருந்ததாம். அதுதானும் இரண்டு முதல் ஆறுவரையில்தான் இருந்ததாம். ஆறுவது பாகத்திலேயே கதை முற்றுப்பெற்றுவிட்டதாம். ஏழாவது பாகம் பின்னல் எழுதப்பட்டது. முதற்பாகமும் அப்படியே பின்னல் வரையப்பட்டது. முதற்பாகத்துள்ள விஷயங்களுக்கும் இரண்டுமுதல் ஆறுபாகங்களிலுள்ள விஷயங்களுக்கும் அநேக முரண்பாடுகள் உள்ளனவாம். வால்மீகி இராமர் காலத்தில் வாழ்ந்தார் என்று சொல்வதும் பிற்காலத்திய கற்பனையே. ஆகவே நமது தென்னிந்தியாவைப்பற்றி ஆரியருக்கு முதல் இராமாயண முதற்பாரத காலங்களாகிய கி. மு. ஆறு ஐந்து நூற்றுண்டுகளில் என்ன தெரிந்திருந்த தென்பதைப் பற்றிச் சற்றே ஆராய்வோம். கி. மு. ஆறும் நூற்றுண்டில் ஆரியர் தென்னிந்தியாவைப் பற்றிச் சற்றே தெரிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் காலத்தில் இலங்கை ஒரு பிரபல நாடாய் விளங்கிற்றென்பதற்கும், அவர்கள் அச்சமயம் சிறந்த நாகரிகமுடையவர்களாயிருந்தார்கள் என்பதற்கும் ஐயமில்லை. ஜனஸ்தான் என்று சொல்லப்பட்ட கோதாவரிக் கரைவரையில் இராவணனுடையசெல்வாக்குச் சென்றிருந்தது. ஜனஸ்தானத்திற்கும் இலங்கைக்கும் கரைவழியாய்ப் போக்குவரவிருந்திருக்கவேண்டும். ஜனஸ்தானும்,கிஷ்கிந்தையென்கிற பெல்லாரி ஜில்லாவும், அக்காலத்தில் ஆரியருக்குத் தெரிந்திருந்தது. ஆனல் தமிழ்நாட்டு மூவேந்தராகிய சேர சோழ பாண்டியரைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. கிஷ்கிந்தைக்குத் தெற்கே யாவும் கானகமாகத் தண்டகாரண்யமா யிருந்ததென்று ஒருமிக்கக் கூறிவிட்டார்கள். இராமர், இலங்கையை நோக்கிச் செல்லும் மார்க்கத்தில், அவருக்கு யாதொரு ஊரும் தென்படவில்லை. காடும், மலையும், குரங்கும் கழுகும், அரக்கரும், இரண்டொரு தபஸ்விகளும் தவிர வேறே மனிதர் அவர்கண்ணிற் படவில்லை. தண்டகாரண்யம் முழுமையும், விராடன், கவந்தன், துந்துபி, காதூடணர் முதலிய அரக்கர்களாலேயே அநுபவிக்கப்பட்டு வந்தது. தென்னிந்தியா முழுமையும் வால்மீகியின் ஞானத்திற்கு அரக்கர், இயக்கர், அவுணர் வானரர்களால் குடியேறப்பட் டிருந்தது.

கி. மு. ஐந்தாம் நூற்றுண்டில் எழுதப்பட்ட மஹாபாரதத்தை நோக்குங்கால், அவ்வராண்யங்களெல்லாம் போய்ப் பெரியதும் செல்வமுள்ளதுமான இராஜ்ஜியங்களாய் மாறிவிட்டன. ஆதிபருவத்தில், திரௌபதி சுயம்வரத்தில் நாம் முன்சொன்னபடி பாண்டிய அரசர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. சஹாதேவன் இராஜசூய யாகத்தில் பாண்டிய நாட்டிற்குச் சென்றதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. சோழபாண்டியர்கள் சந்தனத் தைலத்தைப் பொன்குடங்களிற் கொண்டு, தார்தூரா அல்லது நீலகிரியிலிருந்து வந்த சந்தனம் முதலிய மரங்களை யுற்று வாழ்ந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் கி. மு. ஐந்தாம் நூற்றுண்டிலேயே, தங்கள் செல்வத்தாலும், வியாபாரத்தாலும், நாகரிகத்தாலும் தென்னிந்தியர் பலவகையில் முன்னேற்றம் அடைந்துவிட்டிருந்தார்கள். ஆரியர்கள் அக்காலத்தில் இவ்வூர்களுக்குச் சென்று அவர்களை வென்றார்களோ இல்லையோ, இவர்களுரைப்பற்றியும்,அவர்கள்நாகரிகத்தைப் பற்றியும் பெரிதும் கேள்விப்பட்டிருந்தார் என்பதற்குச் சந்தேகமில்லை.

பின்னல் கி மு. மூன்றும் நூற்றுண்டில் எழுதப்பட்ட இராமாயணத்தின்படி, விதர்ப்பநாடு, கலிங்கநாடு, ஆந்திரதேசம், சோழ பாண்டிய கேரள தேசங்களைப்பற்றிச் சுக்கிரீவன் சொல்வதால் இந்த நாடுகளைப்பற்றிச் சற்றேவிரிவாய் அந்நூற்றுண்டில் ஆரியர் தெரிந்து கொண்டார்களென்று ஏற்படுகிறது. சேர தேசத்திற்குப் பெரிய களஞ்சியமான முசிரி என்னும் ஊரும், பாண்டிய தேசத்திற்கு முக்கிய பட்டணமாகக் கவடம் என்கிறஊரும், அதன்சிறப்பும் சொல்லப்பட்டிருக்கின்றன. புகாருக்கு அருகேயுள்ள சுவேதாரண்யத்தைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

வில்லி சொல்வதைப்போல் திருப்பதி முதலிய ஊர்களை ஆரியர் அறியாவிட்டாலும்,பொதுவில் தென்னிந்தியாவின் சிறப்புப்பெற்ற ஊர்களையும் அரசர்களையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆகையால் கி. மு. ஐந்தாம் நூற்றுண்டிலேயே தென்னிந்தியநாடு சீரும் சிறப்புமெய்திக் கல்வியாலும், செல்வத்தாலும், சீலத்தாலும், உயர்நிலையை யடைந்து, ஆரியரும் கொண்டாடும் தன்மையை அடைந்திருந்தது.

## கும்பகர்ணன்.

கும்பகர்ணன் என்ற பெயருக்குக் குடம்போன்ற காதுடையவனென்று பொருள். சுமாலியின் மகளான கைகேசி தன் தந்தையின் கட்டளைப்படி விசிரவசுவிடஞ்சென்று சேர்ந்த தீயகாலக் கூறுபாட்டால் பிறந்த சகோதரரில் இவன் இராவணன் தம்பி. விபீடணனுக்கும் சூர்ப்பநகைக்கும் மூத்தவன். அவன் பிறக்கும் பொழுதே,

> ஞால மடங்க விழுங்கிடினும்
> நிறையா வயிற்றின் நெடுவரைபோல்
> நீண்ட வுருவன் நிமிர்கையன்
> பிறையார் எயிற்றுப் பிலவாயன்
> பெருத்த விழியன் ஒருக்காலும்
> குறையா தெழுவெம் பசியினோடும்
> கும்ப கர்ணன் பிறந்தனனல்.

என்று ஆசிரியர் கூறியுள்ளார். இவ்வாறு பிறந்த கும்பகருணன் தன் தன்மைக்கேற்ப விளையாடுகையிலேயே பயங்கரமான செய்கைகளைச் செய்து வந்தான். தனக்கு உணவாக மேன்மையான பெரிய முனிவர்களைப் புடைத்துக் கொன்றுதின்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான்.



கும்பகருணன் மலைபோல் நீண்டுயர்ந்து பருத்த சரீரமுடையவன். நீருண்ட மேகத்தையும் இருளையும் ஒத்த நிறத்தன். ஒருவரும் இவனது களிமுகங் கண்டதில்லை. மலைக்குகை போன்ற இவன் வாயிற் கோரைப் பற்களுண்டு; இராவணனது கோபத்திற்காற்றுத சூரியனும் தீயும் வந்து ஒளித்தனவென்னும்படி ஒளிபெற்ற செங்கண்ணன். யானை முதலியன மலைமுழை யென்று தூங்கும் மூக்கும், பாம்புகள் சென்றுறங்கும் அகன்ற குடம்போன்ற காதுகளுமுடையவன்.

நீண்டு நிமிர்ந்த பணைத்த கைகளில் தோள்வளைகளணிந்து பாசத்தைக் கொண்டவன். சிவபிரானிடமிருந்து கவசத்தையும் முத்தலைச் சூலத்தையும் பெற்றிருந்தான். உலகத்தை விழுங்கினும் நிறையாத வயிற்றில் அவனுக்குச் சிறுபொழுதும் பசி குறைவதில்லை. பசிக்கு யானை முதலியவற்றை எலும்புந் தோலும் நீக்கி உதிரக்கடலோடு தின்னும் ஊனுடை வேட்கையன். கட்குடித்தலில் நீங்காக்காதலன். மிகுந்த பசிக்கு வேலாயுதத்தையும் மற்றும் இருப்புப்படைகளையும் கடித்துத் தின்பான். அவ்வாயுதங்கள், தம் வலிக்கு ஈடில்லை என்று அவனுடைய பல்வரிசைகள் சிரித்து ஏளனஞ் செய்யாநிற்கும். இவனுக்குச் சிங்க ஊன் மிசைமிகவும் ஆசையுண்டு. காலனும் நடுங்கும் காலில் வைரங்களழுத்தின வீரக்கழ லணிந்திருப்பான். தேவருயிரையும் அவரவருடலில் தங்காதிருக்கச் செய்யும் ஆற்ற லமைந்தவன். வடவைக் கனல்போன்ற வொரு செஞ்சடைக் காடுடையன்.

ஒருநாள் கைகசி புட்பகவிமானத்திற் செல்லும் குபேரனை இவருக்குக் காட்டி, "மைந்தீர்! உம்முடைய மரபுள்ளோர் ஆண்டுவந்த இலங்கையையும் புஷ்பக விமானத்தையும் இக்குபேரன் தன் தவவலிமையாற் பெற்று ஆண்டு வருகின்றான்" என்று கூறினள். கேட்ட மைந்தர் பொறுமையால் கோபங்கொண்டு, அவைகளைத் தாம் பற்றிக்கொள்வதற்கு தவத்தாலன்றிப் பிறிதொன்றினலு மாகாதெனத் தேர்ந்து பிரமதேவனைக் குறித்துத் தவஞ்செய்து வரம்பெறச் சென்றனர்.

அவர்களில் கும்பகருணன் கடுந்தவஞ் செய்தனன். வேனிற்காலத்தில் பஞ்சாக்கினியின் நடுவுநின்றும், மழைக்காலத்தில் மழைத்தாரையில் நனைந்து நாராசத்தின்மேல் நின்றும், சீதகாலத்தில் நீரில் மூழ்கியும் பிரமனைக் குறித்துத் தவஞ்செய்தான். இவ்வாறு பதினாயிரமாண்டு தவஞ் செய்தான்.பிரமதேவனும் கும்பகர்ணன் தவத்திற்கு வரமளிக்கவந்தனர். கும்பகருணனுடைய கொடியதவத்தையும் பிரமன் அருள்செய்ய வந்ததையுங்குறித்து எண்ணித் தேவரனைவரும் நடுங்கினர். மனங்குலைந்தனர். இவன் வரம்பெற்றால் நம்மனோர்க்கு உய்யும்திற மில்லைஎன்று தடுமாறினர். அப்பால் அனைவரும் ஒன்றுசேர்ந்து பிரமனிடம்சென்று "அனைத்துலகும் படைத்தோனே! தேவரீர் இவனுக்கு வரங்கொடுப்பது நியாயமாகுமா? இவன் இயற்கையிலேயே பலவான், க்ரூரன், துஷ்டன். இதுகாறும் உலகங்களை நடுங்கச் செய்திருக்கின்றான். நந்தன்வனத்தில் ஏழு தேவமாதரையும் இந்திரனுடைய பரிவாரங்களில் பதின்மரையும், கணக்கில்லாத இருடிகளையும் மானிடர்களையுங் கொன்று தின்றிருகின்றான். இவனுக்கு இன்னும் வரங்கள் கொடுத்தால் மூவுலகங்களையும் நாசஞ்செய்வான். வெட்டுவோன் கையில் சிற்றரிவாள் கொடுத்ததுபோல் மீண்டும் இவனுக்கு வரங்களைக் கொடுத்தால் எங்களனைவரையும் கெடுத்ததுபோலாம். ஆதலால் வரங்கொடுப்பதென்ற காரணத்தை வைத்து இவனறிவை மயக்க வேண்டும்." என்று முறையிட்டனர்.

பிரமதேவனு மதற்கிசைந்து கலைமகளான தன்மனைவியிடம் 'எவ்லா வுலகுடன் ஒழுக்கத்தையும் தொலைக்க வெண்ணிய கும்பகருணன் என்னிடம் வரம் வேண்டுங்கால் நீஅவன் நாவில் நின்று நினைப்புக்குமாறாகத் துயில்வேண்டு மென்று கேட்கச்செய்' என்று கட்டளையிட்டனர்.

அப்பால் பிரமதேவன் தேவர்கள்சூழக் கும்பகர்ணனிடம் வந்து: 'அன்ப! நின் தவத்திற் குகந்தோம்; நீ கோரிய வரந்தருவோம்' என்றனர். அதற்குக் கும்பகருணன் 'நிர்த் தேவத்துவம்' (தனக்கு மேம்பட்ட தேவ ரில்லாதிருத்தல்) என்னும் வரம் வேண்டவெண்ணிப் பிரமதேவனிடம் அதை மறித்து 'நித்ராவத்வம்' (எப்பொழுதும் தூக்கத்தை) யளித்தருள வேண்டுமென்று வேண்டினன். உடனே பிரமதேவனும் 'அங்ஙனமேயாகுக' வென் றருளிச் சென்றனர்.

பிறகு கும்பகருணன் மனந்தெளிந்து இவ்வாறு வரம் பெற்றமைக் குளைந்து, இவையெல்லாம் தேவர் செய்த வஞ்சனை யென்றெண்ணித் தன்னிருப்பிடஞ் சென்றான். அப்பால் இராவணன் முதலியோர் பிரகத்தனைக் குபேரனிடந் தூதனுப்பி இலங்கையைப் பெற்று அங்கிருந்து மூவுலகையும் ஒருங்கே யாண்டு வந்தான்.

கும்பகருணன் தனக்குத் தக்க மனைவியைத் தெரிந்தெடுக்க எண்ணினன். வைரோசனன் மகன்மகளான வச்சிரசுவாலை என்னும் கன்னியை மணஞ்செய்து கொண்டான். அவர்களுக்குக் காலனையொத்த திறனுடைய கும்பன் நிகும்பன் என்னும் இரு புதல்வர் பிறந்தனர். தவிர கும்பகருணன் ஆரியாவர்த்தத்திற்குத் தென்கிழக்கிலிருக்கும் தேசமான (ஆஸாம் என்னும் மாகாணம்) காமரூப தேசஞ் சென்றபொழுது கற்கடன் புஷ்கசி என்னும் தாய் தந்தையரோ டிருக்கின்ற கற்கடி என்பளைக் கூடினதால், பீமன் என்னும் பெயருடைய ஓர் குழந்தையும் அவனுக்குண்டு என்று சைவப் புராணங்கள் கூறும்.

கும்பகருணன் குழந்தைகளோடு பல செல்வமும் ஒழுங்கே யமையைப்பெற்று இன்புறும்பொழுது அவனுக்குப் பிரமனிடம் வருந்திப்பெற்ற தவப்பேற்றின் அதிகாரகாலம் வந்துற்றது. உடனே தூக்கத்தால் மயங்கினன். புத்தி வேறு பணிகளிற் செல்லவில்லை; கண்கள் நித்திரைமயக்கத்தால் சுழன்றன. தலை நிலையாக நில்லாது குழைந்தது. கொட்டாவியை அவனல் நிறுத்தமுடியவில்லை. சோம்பலும் சோர்வும் அவனுடையமெய்யையே தம்அரணாகக் கொண்டன. இவ்வாறு வரும் தூக்கத்தை நீக்கமுடியவில்லை, இராவணனிடஞ் சென்றான். நித்திரைசெய்வதற்கு இனிய மணிமண்டபமொன்று அமைத்துத் தருக,வென்றான். உடனே இராவணன் தெய்வத்தச்சனுக்குக் கட்டளையிட்டான். விரைவில் தெய்வத்தச்சனை விசுவகர்மனும் ஓர் மண்டபம் அமைத்தான். அம்மண்டபம்,

ஓசனை யேழுகன் றுயர்ந்த வும்பரின்
வாசவன் மணிமுடி கவித்த மண்டபம்
ஏசற விளங்கிய திருளை பெண்வகை
ஆசையி னிலைகெட அலைக்க லான்றது.

மும்புவனங்களிலும் இஃதொத்த அழகுடையதில்லையெனும்படி அமைத்தான். அம்மண்டபத்தின் நடுவில் ஓர் படுக்கையின்மீது ஆதிசேடன் படுத்ததுபோன்றும், இருளனைத்தும் ஒன்று கூடியதுபோலும், சமுத்திரம் கிடப்பது போலவும், தீவினை யெல்லாம் ஒன்று சேர்ந்தது போலவும், கும்பகருணன் படுத்து நித்திரை செய்தான். தென்றற்காற்று கடலில் தோய்ந்து கற்பகச் சோலையில் தங்கி இனிய வேகத்தோடு வீசியது. வானவர்மகளிர்வந்து அவனுக்குக் கால்பிடித்துக் கொண்டிருப்பப் பெருமூச்சுவிட்டுத் தூங்கினன். மாதர்களின் முகம் சந்திர ஒளிபோல் வீசுவதால் சந்திரகாந்தக் கற்களிலிருந்து ஊறிய நீர்த்துளிகள் கும்பகருணன் முகத்தில் பனிநீர் தெளித்தல்போலச் சிதறின. இவ்வளவு இன்பத்துடன் கும்பகருணன் மெய்ம்மறந்து தூங்கலுற்றான். இவன் தூங்கும் பொழுது ஒருவரும் இடையில் எழுப்பலாகாது. என்றையதினம் இடையில் எழுப்புகின்றார்களோ அன்று இலங்கைக்கும் தனக்கும் அழிவு வருமென்று அறிந்து வைத்திருந்தான். இவன் தூங்கி எழுந்திருக்கும் காலத்தில் ஏராளமாக வறுத்துச்சுட்ட ஊன்களும் பிறவும் நிறைந்த கட்குடங்களும் கொண்டு வைத்திருக்கவேண்டும். அவைகளைத் தான் எழுந்திருந்ததும் படுக்கைப் பானங்களாக உபயோகித்துக் கொள்வானென்றால், மற்றவேளை உணவுகளைச் சொல்லவேண்டியதில்லை.

# தமிழ்ப் பாடம் 71.

## [நளவெண்பா.]

### கலி நீங்கு காண்டம்.

புரோகிதனை நாடவிட்டுத் தன் நாயகன் இருந்தவிடந் தெரிந்துகொண்ட தமயந்தி தனக்கோர் இரண்டாம் சுயம்வரம் என்னும் சூழ்ச்சியால் வருவித்துப், பின் தன் மக்களைக்கொண்டு தேர்ந்துணர்ந்தவளாகித் தந்தையிடஞ் சென்று, "மடைத்தொழில் செய்கின்ற அவ்வாகுகன்காண் என் மன்னன்" என்றுரைப்ப, வீமராஜன் அவனிடமுற்று வினவித் தெளிவதை இனிவரும் நான்கு செய்யுள்களிற் காணலாம்.

போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்
வரிவளைகொண் டேறும் வளநாடன் றன்னைத்
தெரிவரிதா நின்றான் றிகைத்து. 68.

பதப்பிரிவு:—போது அலரும் கண்ணியான் போர் வேந்தர் சூழபோய் காதலிதன் காதலனைகண்உற்றான் ஓதம் வரி வளை கொண்டு ஏறும் வளம் நாடன்தன்னை தெரிவு அரிதா நின்றான் திகைத்து.

பதவுரை.

போது - அரும்புகள்
அலரும் - மலர்கின்ற
கண்ணியான் - மாலையை அணிந்த வீமன்,
போர் - போரில் சிறந்த
வேந்தர் - அரசர்கள்
சூழ - தன்னைச் சூழ்ந்து வர
போய் - சென்று
காதலிதன் - தனது அன்புள்ள புத்திரியின்
காதலனை - கணவனை
கண்ணுற்றான் - பார்த்தான். (பார்த்து)
ஓதம் - கடலானது
வரி - வரிகளமைந்த
வளை - சங்குகளை
கொண்டு - தாங்கி
ஏறும் - கரையில் ஏறுகின்ற
வளம் - வளப்பம் பொருந்திய
நாடன்தன்னை - நிடதநாட்டரசனாகிய நளனை
தெரிவு - தெரிந்து கொள்ளுதல்
அரிதா-முடியாமல்
திகைத்து - திகைப்புற்று
நின்றான் - நின்றான்

செவ்வாய் மொழிக்குஞ் செயலுக்குஞ் சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட வுருவென்னு—எவ்வாயும்
நோக்கினு னோக்கித் தெளிந்தா னுணங்கியதோர்
வாக்கினன் றன்னை மதித்து. 69

பதப்பிரிவு:—செம்மை வாய் மொழிக்கும் செயலுக்கும் சிந்தைக்கும் ஒவ்வாது கொண்ட உரு என்னு எவாயும் நோக்கினன் நோக்கி தெளிந்தான் நுணங்கியது ஓர் வாக்கினன் தன்னை மதித்து.

பதவுரை.

"வாய் - வாயிலிருந்து வருகின்ற
செம்மை - செவ்விய
மொழிக்கும் - இவனது மொழிகளுக்கும்,
செயலுக்கும் - செய்கைகளுக்கும்
சிந்தைக்கும் - எண்ணங்களுக்கும்
ஒவ்வாது-பொருந்தாமல்
கொண்ட - கொண்டிருக்கின்ற
உரு - உருவமாகும் இது"
என்னு - என்று யோசித்து (வீமராஜன்)
எ - எல்லா
வாயும் - வழியாலும்
நோக்கினன் - (உண்மையாதென) கருதினன்.
நோக்கி - கருதி
நுணங்கியது - நுட்பமாகிய
ஓர் - ஒப்பற்ற
வாக்கினன்தன்னை - வாக்கையுடைய நளனை
மதித்து - ஆராய்ந்து
தெளிந்தான் - சந்தேகம் தீர்ந்தான்.

பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை யையுற்று—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா வுன்னை
ஒளியாது காட்டுன் னுரு. 70

பதப்பிரிவு:—பை தலைய நாகம் பணம் என்று பூகத்தின் ஐ தலையின் பாளைதனை ஐயுற்று மந்தி தெளியாது இருக்கும் திரு நாடா உன்னை ஒளியாது காட்டு உன் உரு.



அன்வயம்:—மந்தி, பூகத்தின் பைந்தலையின் பாளைதனை ஐந்தலைய நாக பணம் என்று ஐயுற்றுத் தெளியாது இருக்கும் திருநாடா, உன்னை ஒளியாது உன் உருக் காட்டு.

பதவுரை.

மந்தி - பெண்குரங்கானது,
பூகத்தின் - பாக்குமரத்தின்
பை - பசுமையாகிய
தலையின் - தலையிலுள்ள
பாளைதன்னை - பாளையை
ஐ - ஐந்து
தலைய - தலைகளையுடைய
நாகம் - பாம்பினது
பணம் - படம்
என்று - என்று
ஐயுற்று - சந்தேகங்கொண்டு
தெளியாது - (பாளையென்று) தெரிந்துகொள்ளா [மல்
இருக்கும் - இருக்கின்ற
திரு - அழகிய
நாடா - நாட்டை உடையவனே,
உன்னை - உன்னுடைய ரூபத்தை
ஒளியாது - மறைக்காமல்
உன் - உன்னுடைய
உரு - நிஜ உருவத்தை
காட்டு - காட்டக்கடவாய்" (என்று வீமன் கூறி [னான்)

விரிவுரை:—பைந்தலைய நாகம், என்றும் ஐந்தலைய பாளை, என்றும் இச்செய்யுளில் சொற்கள் அமைந்திருந்தாலும், பொருள் செய்யும்போது, பைந்தலைய பாளை என்றும் ஐந்தலைய நாகம் என்றும், பை யென்னும் சொல்லையும் ஐ என்னும் சொல்லையும் அவை தொடர்ந்து நிற்கின்ற இடங்களிலிருந்து பிரித்து வேறாகக் கூட்டி அன்வயப்படுத்திக் கொள்ளலாம். இப்படிச் சொற்களை அவை நிற்கும் இடத்தினின்று எடுத்துக் கொண்டு வேறு இடத்தில் சேர்த்துப் பொருள் செய்வதைக் கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்று சொல்வார். ஆற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண் தாப்பிசை அளைமறிபாப்பு கொண்டுகூட்டு அடிமறிமாற்று, என்னும் எட்டு வகைப் பொருள்கோள்களில் இதுவொன்று.

குரங்கு, பாளையைக்கண்டு பாம்பென்று பயந்ததெனக் கூறுவது மயக்கவணி. இந்த அணிக்குத் திரிபதிசயவணி என்ற பெயருமுண்டு.

அரவரசன் றான்கொடுத்த வம்பூர் துகிலின்
ஒருதுகிலை வாங்கி யுடுத்தான்—ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்ட
கோத்தாய முன்னிழந்த கோ. 71 [ளிக்கும்

கருத்து:—அவ்வாறு விதர்ப்பன் கேட்கவும், கலியின் வஞ்சனையால் தன் அரசுஉரிமையை இழந்திருந்த நளன், கார்க்கோடகன் கொடுத்திருந்த வஸ்திரங்களில் ஒன்றை உடுத்து மற்றதைப் போர்த்துக் கொண்டான்.

## இலக்கணம்

தொடரிலக்கணத்தில், தொகாநிலைத் தொடர்களாகிய, வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், எழுவாய்த்தொடர், விளித்தொடர், இரண்டுமுதல் ஏழுவரையிலுள்ள ஆறு வேற்றுமை உருபுகளும் விரிந்து நிற்கின்ற வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள், இடைத்தொடர், உரித்தொடர், அடுக்குத்தொடர், என்னும் ஒன்பது வகைகளின் தன்மையையும் கூறினோம்.

தொகைநிலைத்தொடர்களில் வேற்றுமையுருபு மாத்திரமேனும், வேற்றுமையும் அதன் பயனைக் காட்டுவதற்கு அவசியமான சொல்லுஞ் சேர்ந்தேனும், இடையே தொக்கு நிற்கின்ற வேற்றுமைத் தொகைகளையும் பார்த்தோம்.

இனி, வேற்றுமை உருபு அல்லாத மற்றவைகளும் மறைந்து இருத்தல்கூடும். அவ்விதமான (வேற்றுமையல்லாத) தொகைநிலைத்தொடர்கள் ஐந்து வகைகள் இருக்கின்றன. அவைதாம், வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை, என்பன இவ்வைந்தையுங் கற்றுவிட்டால் தொடரிலக்கணம் முடிந்துவிடும். பின் புணரிலக்கணம் கற்கலாம்.

வினைத்தொகை:— தொகாநிலைத்தொடரில் பெயரெச்சத்தொடரை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். விளைகின்ற பயிர், கொல்லும் புலி, அழிகின்றபொருள், போன்ற தொடர்களில் நிலைமொழி பெயரெச்சமாயிருத்தலால் அவையெல்லாம் பெயரெச்சத்தொடர்கள். இவைகளையே, விளைபயிர், கொல்புலி, அழிபொருள் என்று கூறினாலும் அர்த்தம் வேறுபடாது. ஆனால் விளைகின்ற, கொல்லும், அழிகின்ற என்னும் போது அப்பெயரெச்சங்கள் என்ன காலத்தில் வந்திருக்கின்ற வென்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. விளைபயிர் என்றாலோ, முன்விளைந்த பயிர் என்று இறந்தகாலமா, அல்லது இப்பொழுது விளைகின்ற பயிர் என்று நிகழ்காலமா, அல்லது இனிமேல் விளையும் பயிர் என்று எதிர்காலமா, எனக் காலம் வெளிப்படையாகத் தெரிவதில்லை. இவ்விதம் நிலைமொழியானது காலங்காட்டாமல் மறைந்து நிற்கும் பெயரெச்சமாயிருந்தால், அத் தொகைநிலைத் தொடர்க்கு வினைத்தொகை என்பது பெயர்.

தண் தார் புனை சந்திரன் சுவர்க்கி (கலிநீங். 49) என்ற அடியில் 'புனை சந்திரன் சுவர்க்கி' என்னும் தொடரை எடுத்துக் கொண்டால், புனை என்னும் நிலைமொழி புனைந்த (- அணிந்த) என்றிருக்க வேண்டிய பெயரெச்சத்தின் காலம் மறைந்த உருவத்தில் நிற்கின்றது. ஆகையால் அத்தொடர் வினைத்தொகை.

விரவு தாரான்:—(கலிநீங். 51) விரவுகின்றதாரான் என்று பெயரெச்சத்தொடராக விரியக்கூடிய இத்தொகை வினைத்தொகை.

அடு மடையா:—(கலிநீங். 62) அடுகின்ற (-சமைக்கின்ற) என்று இருக்கவேண்டிய பெயரெச்சம் காலம் மறைந்து அடு என நிலைமொழியாய் நிற்பதால் இத்தொடரும் வினைத்தொகை.

உலவு கூந்தல்:—(கலிநீங். 66) இதுவும் வினைத்தொகையே.

பாய் இருள். விரி கதிர். செல் அடி. கொல் யானை. சூழ் நாடு—வினைத்தொகைகள்.

## எம் சொந்தப் பிரசுரங்கள்.

### கோபால் புதிய தமிழ் வாசகம்.

ம-ா-ா-ஸ்ரீ இராகவன் B.A., L.T., எழுதியது.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1-ஆம் வகுப்பு | 0 | 2 | 6 |
| 2-ஆம் வகுப்பு | 0 | 3 | 0 |
| 3-ஆம் வகுப்பு | 0 | 4 | 0 |
| 4-ஆம் வகுப்பு | 0 | 4 | 6 |
| 5-ஆம் வகுப்பு | 0 | 6 | 0 |

சிறுவர் சிறுமியர்களுக்கு நல்ல தமிழில் எளிய நடையில் உயர்ந்த விஷயங்களைப்பற்றிஎழுதியுள்ள புத்தகங்களை வாங்கிக்கொடுத்து வாசிக்கச் செய்வது நலம். அதற்கு ஏற்ற புஸ்தகங்கள் இவை:—

| | | | |
|---|---|---|---|
| ஆஞ்சனேயர், பண்டிதர் - ம. குப்புசாமி முதலியார் எழுதியது | 0 | 5 | 0 |
| சிறுமணிக் கதைகள், எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது | 0 | 5 | 0 |
| கம்பர் அல்லது கவியரசு, பண்டிதர் - அ. நா. கன்னையா எழுதியது | 0 | 5 | 0 |
| சிறுவர்களுக்கான இந்துதேச சரித்திரம், வி. ஜயராமய்யர் B.A., L.T., எழுதியது | 0 | 5 | 0 |
| ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம் எஸ். சுப்பிரமணிய அய்யர் B. A. எழுதியது | 0 | 7 | 0 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை, பண்டிதர்-கா. ரா. கோவிந்தராஜ முதலியார் எழுதியது | 0 | 4 | 0 |
| கோபால் வாய்ப்பாடு | 0 | 1 | 0 |
| புத்திமானே பலவான், (7-ம் பதிப்பு) ஏ. பரசுராமய்யர் எழுதியது. | 0 | 12 | 0 |
| கிருஷ்ணதேவராயர், கே. பி. சேஷாத்திரி ஐயங்கார் எழுதியது | 0 | 8 | 0 |
| பகீரதன், பண்டிதர் அ. நா. கன்னையா எழுதியது | 0 | 6 | 0 |
| பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன், பண்டிதர் - மே. வீ. வேணுகோபால பிள்ளை எழுதியது | 0 | 6 | 0 |
| சூரவாதித்த சோழன், பண்டிதர் - ஆர். எஸ். சாம்பசிவசர்மா எழுதியது | 0 | 10 | 0 |
| இலங்கேசன், Y. சீனுவாஸய்யர் எழுதியது | 0 | 6 | 0 |
| முசுகுந்தன், திரு. மாணிக்கவாசகர் எழுதியது | 0 | 6 | 0 |

English publications.

| | | | |
|---|---|---|---|
| English Selections for Higher Forms by P. S. Sivaswami Iyer. B.A., L.T., | 0 | 12 | 0 |
| Nanda the Paraiah Saint by. C. S Rangaswami Iyengar B.A., L.T., | 0 | 3 | 0 |
| Fables from Mahabharata. by Paramasiva Iyer. B. A., L.T., | 0 | 3 | 0 |

வேண்டும் புத்தகங்களுக்குக் கீழ்கண்டவிலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**B. G. PAUL & Co,**

Francis Joseph Street, Madras.



## அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவ மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனம்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

## ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சிமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302,

தங்கசாலைவீதி, மதராஸ்.



## Our Publications.

**Kamban's Kosala.**

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

**Thoughts for Statesmen**

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதிசயம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை ,, 4.

Vali (Do) விலை ,, 4.

**The Educational Publishing Co.,**

Nungambakam, Madras.




## வர்த்தமானம்

**ரூரல் இந்தியா:—**

ரிடையர்ட் டிப்டிகலெக்டர் ஸ்ரீமான் எ. ஸ்வாமிநாதய்யர் B. A. அவர்களை எடிடர் மானேஜராய்ப் பெற்றுள்ள இப்பாரஸ்டு பஞ்சாயத்துப் பத்திரிகையின், இவ்வருடத்திய ஏப்ரல் மாதத்து இதழ் அனுப்பப் பெற்றோம். இந்திய கிராம வாசிகளுக்குத் தெரிவிப்பது அவசியமெனக் கருதப்படுகின்ற பலவிஷயங்கள் இதனில் அடங்கியிருக்கின்றன. மிஸ்டர் ஸ். வி. இராமமூர்த்தி, M. A., I. C. S. அவர்கள் செய்த பொதுஜனக் கல்வியைப்பற்றிய வொரு பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பும், T. N. S. இராகவாச்சாரியார், கிராமாந்தரங்களில் ஜல சௌகரியங்களைப்பற்றி எழுதியஒரு கட்டுரையும், ஆசிரியர் N. G ரங்கா. பி. லிட், கிராமங்களை சேர்த்தியாக்கச் சொல்லியிருக்கும் சில யோசனைகளையும் இதனில் காண்கின்றோம். பத்திரிகாசிரியர், இந்தியா தேசத்திலுள்ள மாட்டு ஜாதிகளைப் பற்றி விரிவாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார்.

வருடசந்தா:—உள்நாடு. ரூ. 3 0 0. வெளிநாடு ரூ. 4 8 0. காரியாலயம்:—9. ப்ராடீஸ் ரோட் மைலாப்பூர், சென்னை.

***

**இந்தியன்.**

"கொடுமையை யெதிர்த்துநில்," "தேசமே தெய்வம்", அறந்தனை வணங்கிடு," என்ற மூன்று வாக்கியங்களை முன்னணியில் வைக்கப்பெற்று வெளிவரும் இம்மாதாந்திரப் பத்திரிகையின் 2, 3, 4-வது இதழ்கள் வரப்பெற்றோம். இது ஸ்ரீமான் K. வெங்கடராவ் அவர்களை ஆசிரியராகக் கொண்டுள்ளது. கிராமாதிகாரிகள், ஆரம்ப ஆசிரியர்கள், கிராமப்பஞ்சாயத்தார் முதலானவர்களது முன்னேற்றத்தைக்கருதிப் பணிசெய்ய இது வந்திருப்பதாகத் தோன்றுகின்றது. மேல் உத்தியோகஸ்தர்களைத் தமக்கு எப்பொழுதும் 'எஜமானன்' என்று கருதி அடிமைப் புத்தியோடு அவர் சொல்வதையெல்லாம் கேட்டுத் தம் சுயமரியாதையை இழக்கப்படாதென்னும் உணர்வைத் தூண்டி வைப்பதற்குரிய மொழிகளும், "ஸ்ரீபரமஹம்ஸோபதேசம்" என்னும் தலைப்பின்கீழ், உற்றார் பெற்றார் மனையாள் யாருமே ஒருவனுக்கு மெய்யாக உதவமாட்டார் என்பதைக் காட்டும் வைராக்கிய உண்மைகளும் பல விரவி வந்துள. இப்பத்திரிகை யாவராலும் நன்கு மதிக்கப் பெற்றுள்ளது.

வருடசந்தா:—உள்நாடு ரூ 2—0—0. வெளிநாடு ரூ 2-4-0. காரியாலயம்:-அதமன்கோட்டை போஸ்ட், சேலம் ஜில்லா.

***

**சுகவழி—நூற்றெட்டு**

ஸ்ரீமான் சாண்டோ சோமசுந்தரம் செட்டியாரவர்கள், 108 அடிகள் அமைத்து எழுதியுள்ள இச்சிறுநூல் காற்றியல், நீரியல், உணவியல், பொதுவியல்என நான்கு பாகங்கள் கொண்டுள்ளது. இயலிற்கு அடி இருபத்தேழே இருப்பதால் வாரத்திற்கொரு இயலாக அதனை இப்பத்திரிகையில் எழுதித்தருவது சிலருக்குப் பயன்படலாம் என நினைக்கின்றோம். காற்றியல் பின் வருமாறு:—சுத்தாகாயம் சுகத்தைக் கொடுக்கும். காலைக்காற்றே சாலச் சிறந்தது. வாயுசுருங்கில் வாழ்வு சுருங்கும். அசுத்தக்காற்றே நசுக்குங்கூற்று. கெட்டகுப்பையை எட்டிக் கொட்டுக. மாட்டுக் கொட்டாய் வீட்டிற் கட்டேல். புறநகை அசுத்தம் அறக் கழித்திடுக. வீட்டுமுன் மலசலம் விலக்குதல் கூடா. பழையன அழுகல் கழிவன எறிக. படுக்கும் அறைக்குள் தானியம் பரப்பேல். நித்திரை யறையுட் சிறிதொளி வேண்டும். சாளரங் கபாடந் தனைப்பகல் மூடேல். பனியிற் கதவம் பரப்புதல் வேண்டா. காற்றிலாச் சிறுவீடு ஏற்புடைத் தன்று. எதிர்காற் றடிக்கும்இடந்தனிற்படுக்கேல். திறந்தவெளிகளில்உறங்குதல் தீது. சிசுக்களைத் தரையிற் கிடத்துதல் தவறு. போர்த்துக் குழந்தையைப் போற்றலேமாண்பு. முகம் மூடி யுறங்குதல் மூதேவி லட்சணம். காலையிற் போர்த்தே வேலைக்குப் போக. கூட்டத்து நடுவில் கூடியிராதே. திறந்த வெளியில் தினமு முலாவு. மேட்டு நிலத்தில் வீட்டைக் கட்டு. குறுகிய விடத்தில் விளக்கொளி வேண்டின் மாசுள மண்ணெண்ணெய்த் தீபமகற்று. விளக்கெண்ணெய் விளக்கே வேண்டும்நமக்கு. பலபே ரிடையே படுத்துறங் காதே. வீடும் பிறவும் நீடுசுத் தஞ்செய்.

***

சென்னையிற் புதியவொரு அரசியல்கட்சி:—இவ்வருடக் கடைசியில் நடைபெறுவதற் கிருக்கின்ற பொதுத்தேர்தலை முன்னிட்டுத் "தேசமேமுதல் (Nation First) என்னும் பேரைக்கொண்டு ஒரு தனிக் கட்சி ஏற்பட வாரம்பித்திருக்கின்றது. திவான்பகதூர் V. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள் T.R. வெங்கடராம சாஸ்திரியாரவர்கள், யாகப்ஹுஸேன் அவர்கள், திவான்பகதூர் L. A கோவிந்தராகவ ஐயரவர்கள், ஸர். P. S. சிவஸ்வாமி ஐயரவர்கள், ஸர். ஸி. பி. இராமசுவாமி ஐயரவர்கள், திவான்பகதூர் T. ரங்காசாரியார், திவான்பகதூர் ஆரோக்யசாமி முதலியார் முதலிய சிலர் இக்கட்சியின் முதன்மையராய் அமைவர் எனத் தெரிகின்றது. இம்மாதம் 3உ இக்கட்சியின் பொதுக்கூட்டம் ஒன்று திவான்பகதூர் வி. மாசிலாமணிப்பிள்ளை யவர்களின் தலைமையின் கீழ்க் கோக்கலே மண்டபத்தில் கூடிற்று. அக்கூட்டத்தில் பேசிய தலைவரவர்களது உரையினின்றும், திவான் பகதூர் L. A. கோவிந்தராகவ ஐயர், T. R, வெங்கடராமசாஸ்திரியார்,யாகுப் ஹுசேன்முதலியவர்களதுஉரையினின்றும், இக்கட்சி ஜனங்களுக்குள் பிளவைஉண்டாக்க ஏற்படவில்லையென்பதுதெரிகின்றது."சுயராஜ்யகட்சி நாட்டின்நலத்திற்காகஉத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளாது ஒருபக்கமும், ஜஸ்டிஸ் கட்சி தங்கள் வகுப்பின் நலத்தைக்கருதி ஏற்றுக்கொள்வதற்கு ஒருபக்கமும் இருக்க, இடையே சிலர்வந்து மந்திரிப் பதவியைக் கைப்பற்றிவிடுகின்றனர். இது நேரானபடி நாட்டின் நலத்தைக்கருதி உத்தியோகத்தைப் பெறுவதற்கு விருப்பமுடைய ஒரு கட்சி இருக்கவேண்டியது அவசியம். முழுவிடுதலை பெறுவதென்பது இயலாதகாரியம். இயன்றாலும் இப்பொழுது அது ஏற்றதுமன்று. இவ்வாறு கருதுகின்றவர் காங்கிரஸ் கட்சியினுள் சிலர் இருக்கின்றனர். தேசத்தை முதலாகக் கருதாமல் ஜாதியை ஒட்டிக் கட்சிவாதஞ் செய்வது நேரிதன்று எனநினைக்கின்றவர் பிராமணரல்லாதாருள்ளும் சிலர் இருக்கின்றனர். இவ்விருதிறத்தோரும் ஒன்றுகச்சேர்ந்து, இருக்கின்ற அரசாங்கத்தோடு ஒத்துநடந்து தேசத்தின் நன்மைக்காக உத்தியோகங்களை ஏற்றுத் தம்மாலியன்ற உதவியை உலகத்திற்குப் புரியும் பொருட்டே இக்கட்சி தோன்றலாகின்றது" என்பது அன்று அங்குப் பேசியவர்களின் உரைகளின் சாரமாகும்.


**அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:—** முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணு.

வி. பி. சார்ஜ் வேறு. **கலாநிலயம், வேப்பேரி, சென்னை.**

KALANILAYAM.
REG. NO. M, 2324.

இதன் விலை ரூ. 2-0-0

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டது. கண்ணைக் கவரத்தக்க அனேக ஆப்டோன் படங்களுடனும், லயன் பிளாக்குகளுடனும் 400 பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேப்பரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரேவிதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல்கொண்டு ஒருவரையொருவர் மணந்து கூடிக் களிப்புற்று, நற்சந்ததிகளைப்பெற்று, இல்லற நீதிகளை வழுவாமற்செய்து வாழ்ந்துவருவதே இன்பவாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்துகொள்வதற்கேதுவாக நம்முன்னோர்கள் அகப்பொருள் நூல்களை, வெளியிட்டிருக்கின்றனர்.

இதில் நமது பூர்வீகச் சாஸ்திரங்களின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துக்களும் வேறு பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும் இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அனேக விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

## ஆரியன் புக் டிபோ,

நெ. 19, தாண்டவராயமுதலி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

---

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !

## "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை.

தமிழ் மக்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை வெளி வந்து விட்டது. மத ஆராய்ச்சி தமிழ் மொழி வளர்ச்சி, அரசியல் அறிவு, நவீனமுறையில் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முயற்சிக்கான அறிவு வளர்ச்சி சுகாதார அபிவிருத்தி, கிராம முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், மாணவர் அறிவைப் பெருக்கல், தேச விடுதலைக்காகப் பிரசாரம் செய்தல் முதலிய விஷயங்களோடு விநோத விஷயங்களும் வேடிக்கைப் படங்களும், கற்பனைச் சிறு கதைகளும் படிப்போர் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் முறையில் வெளி வருகின்றன. இன்றே சந்தாதாராகச் சேருங்கள்.

சந்தா விபரம்:—உள்நாடு வருட சந்தா ரூ. 3. ஆறு மாத சந்தா ரூ. 1-12. வெளிநாடு வருட சந்தா ரூ. 4.

189054 ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

---

திரு கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எழுதிய ஆராய்ச்சி நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| அப்பர் சுவாமிகள் சரித்திரம், ஆராய்ச்சியுடன் ராப்பர் ரூ. 0—14 கலிக்கா | 1 | 4 | 0 |
| திருஞானசம்பந்தர் சரித்திரம், ஆராய்ச்சியுடன் ராப்பர் ரூ. 1—4 கலிக்கா | 1 | 10 | 0 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் ராப்பர் ரூ. 1—2 கலிக்கா | 1 | 8 | 0 |
| மாணிக்கவாசகர் சரித்திரம், ஆராய்ச்சியுடன் ராப்பர் ரூ. 0—14 கலிக்கா | 1 | 4 | 0 |
| சந்தானுசாரியர் சரித்திரம், ஆராய்ச்சியுடன் ராப்பர் ரூ. 0—8 கலிக்கா | 0 | 12 | 0 |
| சேக்கிழார் சுவாமிகள் சரித்திரமும் பெரியபுராண ஆராய்ச்சியும். ராப்பர் ரூ. 1—0 கலிக்கா | 1 | 9 | 0 |
| முருகன் பெருமை | 0 | 3 | 0 |
| திருக்குறள் பொழிப்புரை. ராப்பர் 0 14 0 கலிக்கா ரூ. 1—4 ரெக்ஸைன் | 3 | 0 | 0 |
| முருகன் புகழ்மாலை (2வது பதிப்பு) முருகனைப்பற்றிய நூல்களும், முருகனடியார் வரலாறுகளு மடங்கியன. | 3 | 0 | 0 |
| குமாரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு அரும்பொருள் விளக்கத்துடன் | 3 | 8 | 0 |

| | | | |
|---|---|---|---|
| சைவசித்தாந்த உரைக்கொத்து 7 வசனநூல்க ளடங்கியது | 2 | 0 | 0 |
| நீதிநூற் கொத்து மூலமும் உரையும் | 1 | 6 | 0 |
| நாலுநூற்பது மூலமும் உரையும் | 1 | 8 | 0 |
| நளவெண்பா உரையுடன் | 1 | 4 | 0 |
| நாலடியார் உரையுடன் | 1 | 4 | 0 |
| சித்தாந்த சாத்திரம் 14-ன் மூலம் | 2 | 8 | 0 |
| **தேவாரம்.** | | | |
| திருஞான சம்பந்தர் தேவாரம் கலிக்கா | 7 | 8 | 0 |
| ஷை பட்டு அல்லது ரெக்ஸைன் | 8 | 0 | 0 |
| அப்பர் சுவாமிகள் தேவாரம் கலிக்கா | 6 | 8 | 0 |
| ஷை பட்டு அல்லது ரெக்ஸைன் | 7 | 0 | 0 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் கலிக்கா | 3 | 0 | 0 |
| ஷை பட்டு அல்லது ரெக்ஸைன் | 3 | 8 | 0 |
| நைடத மூலம்-ராப்பர் ரூ. 1—4 கலிக்கா | 1 | 8 | 0 |
| **திருவிளையாடற் புராணம்.** | | | |
| மதுரைக் காண்டம் உரை | 8 | 12 | 0 |
| கூடற் காண்டம் உரை | 7 | 8 | 0 |
| திருவாலவாய்க் காண்டம் உரை (அச்சில்) 3 காண்டங்களுக்கும் மொத்த விலை | 21 | 0 | 0 |

விரிவான புத்தகவிலைப்பட்டி இனாம்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்., 6, பவளக்காரத் தெரு, சென்னை.

---

## முருகன்—ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் இயற்றியதும், இங்கிலாந்திலும் இந்தியாவிலும் சிறந்ததெனக் கொண்டாடப்படுவதுமான ஒரு நாவல் நூலிற்கு ஸ்ரீமதி. கிருஷ்ணகுமாரி செய்துள்ள தமிழ் மொழி பெயர்ப்பு. நவநாகரிகத்தின் போலித்தன்மையை உடைத்துக்காட்டி உழவின் மேன்மையைப் பாராட்டுகின்ற இக்கதையின் அமைப்பும் நடையும் களிப்பைத் தரவல்லன.

விலை:—1 8 0 வி. பி. செலவு வேறு. கலா நிலயம், வேப்பேரி, சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mt. E. Kumarlah, B.A., B.L. (Editor)